Registered as a News paper in Ceylon

விலை சதம் 15

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்: 49
போன்: 380

National Tamil Daily

மலர் 10
இதழ் 360
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் தை 25 ஜுலை: 19 வெள்ளிக்கிழமை [7-2-69]




# தி. மு. க. சட்டசபை குழு 9-ம் திகதி கூடுகிறது

## முதலமைச்சர் யார் என்று அன்று தெரியும்

சென்னை, பெப் 6

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டசபை அங்கத்தவர்கள் இம் மாதம் 9ம் திகதி கூடி தமது புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பார்கள்.**

**தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படுபவர் அறிஞர் அண்ணா வகித்த முதலமைச்சர் பதவியை பொறுப்பேற்பார்.**

**தற்போது தமிழக தற்காலிக முதலமைச்சராகப் பணியாற்றும் திரு. இரா. நெடுஞ்செழியன் புதிய தலைவராக தேர்ந்தெடுக்கக்கூடிய சாதகமான சூழ்நிலை நிலவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.**

காலஞ் சென்ற தமிழக முதல்வர் அறிஞர் சி. என். அண்ணாத்துரையின் இடத்தை நிரப்புவதற்கு ஏற்ற புதிய தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பதற்காக சென்னையில் 9,ம் திகதி காலை தி-மு-க சட்டசபை உறுப்பினர்கள் கூடுகிறார்கள்.

தி-மு-க சட்டசபை உறுப்பினர்கள் எல்லாருக்கும் 9-ம் திகதி காலை புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு வந்து கூடும்படி தந்தி அனுப்பப்பட்டுள்ளது.

சட்டசபை தலைமைக் கொரடா திரு. அழகமுத்து இன்று இந்தத் தகவல்களை வெளியிட்டார்.

235 பேர் கொண்ட தமிழக சட்டசபையில், தி-மு-கவின் வலு 139, சட்டசபை துணை சபாநாயகர் புலவர் கோவிந்தன் (தி-மு-க) உட்பட தி-மு-க உறுப்பினர் எல்லாரும் கூடி புதிய தலைவரை தேர்ந் தெடுப்பர் இப்படித் தேர்ந்தெடுக்கப்படும் புதிய தலைவர் அமரர் அறிஞர் அண்ணா வகித்த முதலமைச்சர் பதவியை பொறுப்பேற்பர்.

### நெடுஞ்செழியன் முதலமைச்சர்?

அறிஞர் அண்ணாவின் இடத்தை நிரப்பக் கூடிய புதிய தலைவராகத் தற்போதைய தற்காலிக முதலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் தேர்ந்தெ

(8- ம்பக்கம்பார்க்க)

## சாகும்வரை உண்ணாவிரதம்: பூட்டோ அறிவிப்பு

லாகூர், பெப் 6

**பாகிஸ்தான் முன்னாள் வெளியுறவு மந்திரி திரு அலி பூட்டோ சாகும்வரை உண்ணா விரதம் இருக்கப் போவதாக அறிவித்துள்ளார்.**

லாகூர் நீதிமன்றத்தில் இவர் மீதானவழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்த போது இதனை இன்று அறிவித்தார். கடந்த நவம்பரில் திரு பூட்டோ கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டார்.

ஒரு காலத்தில் பாக். ஜனாதிபதி அயூப்கானின் வலது

(8-ம் பக்கம் பார்க்க)

## பிரதமருடன் 21-ல் தமிழரசு எம். பிக்கள் முக்கிய சந்திப்பு

கொழும்பு வியா.

தமிழரசுக்கட்சி எம். பிக்கள் இம்மாதம் 21ந் திகதி பிரதமர் டட்லி சேனநாயக்காவை சந்தித்து முக்கிய விஷயமாக பேசவிருக்கிறார்கள். தமக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை பிரதமர் நிறைவேற்றுவாரா, இல்லையா என்பதுபற்றி தமிழரசு எம. பிக்கள் பிரதமரை கேட்பார்கள்.

இந்தப் பேச்சுவார்த்தையை அடுத்து 22ம்திகதி தமிழரசு எம். பிக்கள் கூடி தொடர்ந்து அரசாங்கத்துக்கு ஆதரவு அளிப்பதா இல்லையா என்பது பற்றி முடிவு செய்வர். பிரதமருடன் 21ம்

(8-ம் பக்கம் பார்க்க)

## மரண அறிவித்தல்

சுன்னாகம் நவா பிறதர்ஸ் **உதவியாளர் பசுபதிப்பிள்ளை சுந்தரலிங்கம்** (சுந்தரப்பா) 6-2-69 அன்று காலமாகிவிட்டார். இவர் திரு. திருமதி பசுபதிப்பிள்ளை செல்லம்மா அவர்களின் அருமை மைந்தனும், தவமணி, ருக்சமணி, விசுவலிங்கம், பரமலிங்கம், ஆகியோரின் அருமைச்சகோதரரும், கு. கனகசுந்தரம், நா. தம்பிராசா அவர்களின் மைத்துனரும் சுன்னாகம் வர்த்தகர் கா. அம்பலவாணர் அவர்களின் பெருமகனும் ஆவர். அன்னாரின் தகனக்கிரிகைகள் புங்குடு கிழக்கு 7-ம் வட்டாரத்திலுள்ள மயானத்தில் 7-2-69 வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் நடைபெறும். அறிவிப்பாளர்: நவா பிறதர்ஸ் சுன்னாகம். 788

## தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று இழுக்கப்பட்ட 232.வது தேசிய லொத்தர் சபை சுவீப் சீட்டிழுப்புமுடிவுகள் வருமாறு:

முதலாம் பரிசு
14 J 0995 ரூ,100, 000

இரண்டாம்பரிசு
06 ๒ 0052 ரூ.40,000

மூன்றும் பரிசு
05 V 0370 ரூ.10,000

ரூபா 992-30சதம்பெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு.

| | |
|---|---|
| 45 M 0327 | 40 Z 0837 |
| 27 U 0151 | 48 N 0472 |
| 39 X 0476 | 20 M 0885 |
| 48 Z 0854 | 40 H 0046 |
| 41 A 0532 | [illegible] |

(8-ம் பக்கம் பார்க்க)

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் கீலக வருடம் தை மாதம் 27-ந் திகதி (9-2-69) ஞாயிற்றுக்கிழமை பகல் 12 மணி தொடக்கம் 12-36 மணி வரையிலுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

| எங்கள் புத்திரன் | எங்கள் புத்திரி |
|---|---|
| திருநிறை செல்வன் | திருநிறை செல்வி |
| Dr. வ. திருவடிவேல், B. D. S. (Cey.) | கமலாதேவி |
| (பல் வைத்தியசாலை, கொழும்பு) | |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

திருவருள் நலத்தினால் நடைபெறும் திருமண வைபவத்திலும், இரவு நடைபெறும் கலை நிகழ்ச்சிகளிலும் தாங்கள் தங்கள் சுற்றம்சூழ நல்வரவு தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

### கலை நிகழ்ச்சிகள்

கொழும்பு கோஷ்டியினரின் விசேஷ நிகழ்ச்சி
இரட்டையர் குழுவினரின் இசைக்கச்சேரி
கல்வியங்காடு கோஷ்டியினரின் சதுர்க்கச்சேரி

இங்ஙனம்

| | |
|---|---|
| செ. வயித்தியலிங்கம்பிள்ளை | அ. சி. விஷ்ணுசுந்தரம் சமாதான நீதவான், |
| (இளைப்பாறிய மலாயன் ] ரயில்வே உத்தியோகஸ்தர்) | (அதிபர், விஷ்ணு ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ், வல்வெட்டித்துறை) |
| தம்பதிகள் | தம்பதிகள் |
| வல்வெட்டித்துறை. | வல்வெட்டித்துறை. |

1183

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## வாடகைக்கு

வீடு:

தின்னவேலியில் நவீன வீடு மின்சாரம், மோட்டார் வசதிகளுடன் உடனடியாக வாடகைக்குண்டு. தொடர்பு கொள்க. N. K. நல்லதம்பி, அம்மன் ரோட், தின்னவேலி. 651

## விற்பனைக்கு

காதற் பறவைகள் (Love Birds) விற்பனைக்கு உண்டு. இடம்: 15, விக்டோறியா வீதி, யாழ்ப்பாணம். 655

கார்:

E L இலக்கம் கொண்ட வக்ஸ்சோல் வைமன் கார் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க A. கதிர்காமர், காங்கேசன் துறை வீதி, மல்லாகம். 522

வீடு

நாலு பரப்புக் காணியில் நாலு படுக்கை அறைகளைக் கொண்ட வீடு, தண்ணீர் வசதி, வடிகால் மற்றும் நவீன வசதிகளுடன் உடனடியாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: 272, நாவலர் வீதி, அத்தியடி. 649

நெல்

3 புசல் கொண்ட மூடை ஒன்று (இடை 140 ருத்தல்) கொண்டு வந்து கொடுப்பவர்களுக்கு மூடை ஒன்றிற்கு ரூபா 45 - வீதம் கொடுக்கப்படும். நெல் விற்க விரும்புவோர் தயவு செய்து தொடர்பு கொள்ளவும். மாப்பியன் மில் - மானிப்பாய், மாப்பியன் மில் - சுதுமலை. 638

## குத்தகைக்கு

எலக்றிக் வெல்டிங் பிளான்ட் சகல வசதிகளுடனும், யாழ். நகர எல்லைக்குள் பிரபலியமான வீதியில் இடவசதியும், சகல இதர ஆயுத உபகரண வசதியுடனும் குத்தகைக்கோ அல்லது கொமிஷனுக்கோ இருக்கிறது. விபரங்களுக்கு விளம்பர இலக்கம் 657, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 657

## தேவை

யாழ்ப்பாணம் மெயின் வீதியில் நல்ல நிலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பிடவை ஸ்தாபனத்திற்கு பங்காளர் தேவை. விரும்புவோர் விளம்பர இல. 656, மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும். 656

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கவிருக்கும் மோட்டார் சாரத்திய பயிற்சி நிலையத்துக்கு சிறு முதலுடன் பங்காளியாகவும், வேலை செய்யக்கூடியவராகவும் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 523, ''ஈழநாடு'' மே/பா, யாழ்ப்பாணம். 523

யாழ்ப்பாணம், பெரிய கடையில் உள்ள ஒரு பார்மஸி & டிஸ்பென்சரிக்கு பங்காளி (Working Partner) தேவை. நல்ல சம்பளம் உண்டு. விளம்பர இல:658, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 658

மின்தொழில் ஸ்தாபனத்தில் உதவியாளராக சேர்வதற்கு ஆர்வமுள்ள இளைஞர் தேவை. சிறு தொகை பிணைப்பணம் கட்டக்கூடிய நல்லொழுக்கமுடையோர் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம் 659, 'ஈழநாடு' மேற்பார்த்து. 659

**3-வது வாரம்!**

**ராஜா**

(யாழ்ப்பாணம்)

தினசரி 4 காட்சிகள்

10-30, 2-30, 6-30, 9-45

எம். ஜி. ஆர்-ஜெயலலிதா மற்றும் பலர் நடித்த

**ஒளி விளக்கு**

(ஈஸ்ட்மென் கலர்)

(எஸ். ரி. ஆர். வெளியீடு)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## அறிவித்தல்

**நல்லூர் உப மின் நிலையத்திலிருந்து பயனடையும் மின் பாவனையாளர்களுக்கு**

மேற்படி உப மின் நிலையத்துடன் தொடர்புள்ள மின் இணைப்புப் பாதைகளில் அத்தியாவசிய திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருப்பதால் 1969-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ம் திகதி காலை 8-00 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரை மின்சார விநியோகம் தடைப்படுமென்பதை மேற்படி பாவனையாளர்களுக்கு அறியத்தரப்படுகிறது.

ஏ. ரி. சுந்தரம்,
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
3-2-69. 1182

## ஏல விற்பனவு

யாழ்ப்பாணம் 276 கே.கே.எஸ். வீதி, திரு. வை. துரையப்பா அவர்களிடம் 1-1-68 க்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 23-2-69 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி தொடக்கம் அதே இடத்தில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
ஏலவிற்பனவாளர்
1177

இன்றுமட்டும்

மானிப்பாய்

**வெஸ்லி சினிமா**

தினசரி 6-30, 9-30 மணி
பிரிபோயா. போயா 2-30 மணி

ஜெய்சங்கர், கே.ஆர்.விஜயா நடித்த

**பொன்னான வாழ்வு**

யாழ்நகரில் திரையிடப்படாத புத்தம் புதிய வெளியீடு!

## பரிசளிப்பு

அளவெட்டி, வெள்ளி தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின் 23-வது ஆண்டு பரிசளிப்பு விழா இன்று தெல்லிப்பழை காசிவிநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

இணுவில்

**ஸ்ரீ காலிங்கன்**

தினசரி 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30

சிவாஜி - பத்மினி நடித்த

**ஸ்ரீ வள்ளி**

(கேவா கலர்)

## முகத்துவாரத்தில் நூல்நிலைய

கொழும்பு, வியாழன்

கொழும்பு முகத்துவாரத்தில் சுமார் மூன்று லட்சம் ரூபா செலவில் ஒரு பொது ஜன நூல்நிலையத்தை உருவாக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. டிலாசா சந்திக்கருகாமையில் இந்த நூல்நிலையத்துக்கான அத்திபாரக்கல்லை அமைச்சர் திரு. சுகததாசா சமீபத்தில் நாட்டினர்.

(வி. நி.)

## இன்றுமுதல் குதூகல ஆரம்பம்!

**வெலிங்டன் — யாழ்நகரில்**

தினசரி 2-30, 6-30, 9-30 மணிக்கு

★ மக்கள் திலகம் **எம். ஜி. ஆர்.**

★ நடிகையர் திலகம் **சாவித்திரி**

★ நம்பியார் ★ நாகேஷ் ★ ராகினி

நடித்த

கௌரி பிக்சர்ஸ் **பரிசு**

மு. கருணாநிதியின் விமர்சனத்துடன்

S. S. வாசன் அவர்களால்



ஈஸ்மன்கலரில்படமாக்கப்பட்டு சென்னையில் நடைபெற்ற

இரண்டாவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சிமகாநாட்டு கோலாகல காட்சியையும்

மற்றும்

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். - அறிஞர் அண்ணா ஆகியோர் இம்மகாநாட்டில் சொற்பொழிவாற்றுவதையும் பார்க்கலாம்!

தமிழ்நாடுசென்று விழாவைப் பார்க்காதவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!

இன்றுமுதல்

கிங்ஸ்லி பிளாஸா மற்றும் சினிமாஸ் திரைகளில்

**சிவாஜி—கே. ஆர். விஜயா**

முத்துராமன் — நாகேஷ் — எல். விஜயலக்ஷ்மி

நடித்த

**ஊட்டிவரைஉறவு**

(ஈஸ்ட்மன் கலர்)

இப்பொழுது நடைபெறுகிறது

**வின்ஸர் திரையில்**

தினசரி 4 காட்சிகள்

காலை 10-30, பிற்பகல் 2-30, 6-30, 9-45.

★ எம். ஜி. ஆர். ★ ஜெயலலிதா


நாகேஷ், நம்பியார், ராஜ்ஸ்ரீ நடித்த

G. N. வேலுமணி அளிக்கும்

**குடியிருந்த கோயில்**

## இன்று குதூகல ஆரம்பம்!

**மனோஹரா** (யாழ்ப்பாணம்) தினசரி 2-45, 6-45, 9-45, — **ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 2-30, 6 30, 9-30.



"தென்னகத்து ஜேம்ஸ்பொன்ட்"

ஜெய்சங்கர்

"அலேக்"

விஜயநிர்மலா

அசோகன்

ராம்தாஸ்

சோ


வி. எஸ். ராகவன்

விஜயன்

மற்றும் பலர்

நடித்த

ஏ.எல்.எஸ். புரொடக்ஷன்ஸ்



**நீலகிரி எக்ஸ்பிரஸ்**

கதை-வசனம்: 'சோ' டைரக்ஷன்: திருமலை-மகாலிங்கம் இசை; மெல்லிசை மன்னன் டி. கே. ராமமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான்கு வல்லரசு கூட்டுமுயற்சிக்கு அமெரிக்காவும் சம்மதம்

வாஷிங்டன், பெப். 6

நான்கு வல்லரசு கூட்டு முயற்சிக்கு பிரான்ஸ் தெரிவித்திருந்த யோசனைகளை அமெரிக்கா கொள்கையளவில் ஏற்றுக் கொண்டு விட்டதாக உத்தியோக பூர்வமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

வாஷிங்டனிலுள்ள பிரெஞ்சு தூதரிடம் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. ரோகர்ஸ் அமெரிக்க அரசாங்கத்தின் குறிப்பைக் கையளித்தார்.

ஐ. நா. பந்தோபஸ்து சபையின் ஆதரவில் மேற்காசிய அமைதிக்கு வழி வகுக்கும் விதத்தில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சோவியத் யூனியன் ஆகிய நான்கு வல்லரசு நாடுகளும் கூட்டுமுயற்சியில் இறங்க வேண்டும் என்று பிரான்ஸ் யோசனை கூறியிருந்தது. இந்த யோசனைகளை ஏற்கனவே சோவியத் யூனியன் ஏற்றுக் கொண்டு விட்டது. பிரிட்டனும் இந்த யோசனைக்கு சாதகமான கருத்துடனிருப்பதாகக் கருதப்படுகின்றது. இப்பொழுது அமெரிக்காவும் இந்த யோசனையை ஏற்றுக் கொண்டிருப்பதால் வெகு விரைவில் மேற்காசிய நெருக்கடி குறித்து இந்த நாடுகள் ஒரு முடிவுக்குவரக் கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதாகக் கருதப்படுகின்றது.

பந்தோபஸ்து சபையின் ஆதரவிலேயே இந்தக்கூட்டு முயற்சி இருக்க வேண்டுமென்றும் இந்த முயற்சிகள், மேற்காசியாவில் அமைதிக்கு முயற்சிகள் மேற்கொண்டிருக்கும் ஐ. நா. அதிகாரி திரு. குணர்ஜாரிங்கின் கைகளைப் பலப்படுத்துவனவாகவே இருக்க வேண்டுமென்றும் அமெரிக்கா பிரான்சுக்கு அனுப்பியுள்ள குறிப்பில் தெரிவித்துள்ளது. முதலில் இருதரப்பு சந்திப்புகள் இடம் பெற்றால்தான் நான்கு வல்லரசு கூட்டுமுயற்சிக்குவசதியாகவிருக்குமென்றும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## அணு பரவல் தடையை அங்கீகரிக்க யோசனை

அணு ஆயுதத்தடை பிரகடனத்தை ஏற்றுக் கொள்ளும்படி ஜனாதிபதி நிக்ஸன் அமெரிக்க செனட்சபையைக் கேட்டிருக்கின்றார்.

பேச்சுவார்த்தைகள்மூலம் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளும் தமது கொள்கையை இந்த நடவடிக்கை பலப்படுத்துவதாகவிருக்குமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையுடன்

# உறவுகள் மேலும் வலுப்பட வேண்டும்

## கோஸிஜின் விருப்பம்

மாஸ்கோ பெப். 6

இலங்கை சுதந்திரதினத்தையொட்டி சோவியத் பிரதமர் திரு. கோஸிஜின் அனுப்பிய செய்தி பின்வருமாறு:-

இலங்கை மக்களுக்கும் சோவியத் மக்கள் சார்பிலும், சோவியத் அரசாங்கத்தின் சார்பிலும், எனது சார்பிலும் இதயமார்ந்த பாராட்டுகளையும் நல்வாழ்த்துக்களையும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

சோவியத் யூனியனுக்கும் இலங்கைக்குமிடையில் ஸ்தாபிக்கப்பட்ட நட்புறவுகளும் ஒத்துழைப்பும் எமது இரு நாடுகளினதும் மக்களின் நலன்களுக்குப் பணிபுரிவதுடன், ஆசியாவிலும் அகில உலகத்திலும் சமாதானத்தை வலுப்படுத்தவும் உதவுகின்றன. இந்த உறவுகள் மேலும் வலுப்படுத்தப்பட்டு வளர்க்கப்படும் என நான் திடமாக நம்புகிறேன்.

பிரதமர் அவர்களே, உங்களுக்கு நல்லாரோககியம் கிட்டுவதாகுக என்றும், நேசபூர்வமான இலங்கை மக்களுக்கு நல்வாழ்வும் முன்னேற்றமும் உண்டாவதாகுக என்றும் வாழ்த்துகிறேன்.

## பிரிட்டிஷ் தொண்டர்கள்

லண்டன், பெப். 5

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் கடமையாற்றும் பிரிட்டிஷ் தொண்டர்களின் தொகையை அதிகரிப்பதென பிரிட்டிஷ் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்சமயம் 1,734 தொண்டர்கள்வெளிநாடுகளிலுள்ள பல்வேறு அபிவிருத்தி திட்டங்களில் பணியாற்றிவருகிறார்கள். அடுத்த ஆண்டு இத்தொண்டர்களின் தொகை 1900 ஆக அதிகரிக்கப்படும். இவர்களில் 60 விகிதமானோர் ஆசிரியர்களாகும். ஏனையோர் பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்களகும்.

சுமார் 70 நாடுகள் பிரிட்டிஷ் தொண்டர்களின் உதவியை கோரியிருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## மாணவர் இரத்ததானம்

நல்லூர், வியாழன்

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மூன்று கல்லூரிகளிலிருந்து 70 பைந்து இரத்தத்தை சேகரித்தனர், யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இரத்த வங்கியினர்.

புங்குடுதீவு மகாவித்தியாலயம், புலோலி ஆண்கள் ஆங்கில பாடசாலை, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆகிய 3 பாடசாலைகளிலிருந்துமே இந்த 70பைந்து இரத்தமும் சேகரிக்கப்பட்டது.

இரத்தவங்கி வைத்திய அதிகாரி டாக்டர் சி. ஏ. பிலிப்பையா கல்லூரிக்குச் சென்று இரத்தம் சேகரித்தார்.

## இந்த மாணவர்களுக்கு இல்லை

ஊர்காவற்றுறை, வியாழன்

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த தம்பாட்டி அரசினர் தமிழ்ப் பாடசாலையில் புதுவருட ஆரம்பம் தொடக்கம் இன்றுவரையும் மத்தியான உணவாக பணிசோ, பிஸ்கட்டோ வழங்கப்படவில்லை. இப்பகுதியில் எல்லாப் பாடசாலைகட்கும் உணவு விநியோகிக்கப்பட்டுள்ளது. பழைய அரசினர் பாடசாலையாகிய இப் பாடசாலையை புறக்கணித்தமை பற்றி இப்பாடசாலை ஆசிரியர்களும் பிள்ளைகளின் பெற்றோர்களும் மிகுந்த கவலையடைகின்றனர்.

## கோவில் புனரமைப்பு

உடும்பராய், வியாழன்

உடுவில் மீனாட்சி கோயில் திருப்பணிவேலைகள் துரிதமாக நடந்துகொண்டிருக்கின்றன. பிரகாரமூர்த்திகளான விநாயகர்கோயில், சுப்பிரமணியர் கோயில் நுட்பமான சிற்பவேலைகளுடன் கட்டப்பட்டுள்ளன. வசந்த மண்டபம் புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இம் மீனாட்சிஅம்மன் திருப்பணி வேலைகளுக்கு இப்பகுதியிலுள்ள ஆட்சிமன்ற உறுப்பினரும் சைவ அடியார்களும் நன்கொடைகள் வழங்கவும் இயன்ற உதவிகளைச் செய்யவும் முன் வந்துள்ளனர்.

## மரத்தளபாடம் அவுஸ்திரேலியாவுக்கு ஏற்றுமதி

பம்பலப்பிட்டி, வியாழன்

இலங்கைத்தச்சுத் தொழிற்சாலையொன்றில் கையினால் செய்யப்பட்ட வீட்டத்தளபாடங்கள் அவுஸ்திரேலியாவுக்கு இன்று கப்பல் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டன, மரத்தினால் செய்யப்பட்ட இத்தளபாடங்களில் பாரம்பரிய கலைச்சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

கொழும்பிலுள்ள தனியார் நிறுவனம் ஒன்றில் செய்யப்பட்ட இத்தளபாடங்களை அவுஸ்திரேலியா இலங்கையிலிருந்து இறக்குமதி செய்துள்ளது.

## அமைதியான வரவேற்பு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் துணை ஆயருக்கு அமைதியான முறையில் 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகம் வரவேற்பளித்தது. அண்ணாவின் மறைவைத் தொடர்ந்தே அமைதி வரவேற்பளிக்கப்பட்டது. வரவேற்பை அடுத்து கழக முன்றலில், கறுப்புக்கொடி பறக்கவிடப்பட்டது. தற்காலிக முதலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியனுக்கு அண்ணா மறைவு குறித்து அனுதாபச் செய்தியொன்றை [illegible] கழகம் அனுப்பிவைத்தது.

(தே. நி)

# ஒரு ரூபாய்க்கு சண்டை: பதினைந்து ரூபா தண்டம்

முல்லைத்தீவு வியாழன்

ஒருரூபாய்க்காக பகிரங்க வீதியில் சண்டையிட்ட இருவர் தலா 15 ரூபா அபராதம் கொடுத்தனர். முல்லைத்தீவு வாசிகளான நாகன் சிவஞானபாதம் என்பவரும் சரவணமுத்து கிருஷ்ணராசா என்பவரும் பகிரங்க வீதியில் சண்டையிட்டுப் பொதுமக்களுக்குத் தொந்தரவு செய்தார்களென முல்லைத்தீவுப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. ஆர். நவரத்தினம் முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப் பட்டபொழுது 'ஏன்சண்டையிட்டீர்கள் என்று நீதிபதி கேட்டார்' தாங்கள்ஒரு ரூபாவுக்காகவே சண்டையிட்டதாகக் கூறினார்கள். இப்படி நடப்பது பிழையெனக் கூறிய நீதிபதி இருவரையும் தலா ரூபா 15 குற்றங்கட்டிப் போகுமாறு உத்தரவிட்டார்.

# சுதந்திரதின விழாவில் அண்ணாவுக்கு அஞ்சலி

அளவெட்டி வியாழன்

இலங்கையின் 21-வது சுதந்திரதினவிழா வலி. வடக்குப்பகுதி காரியாதிகாரி பிரிவின்சார்பில்ஏழாலை மத்தியமகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இச் சுதந்திரதின விழாவில் அண்ணாவின் மறைவுக்கு இரு நிமிடநேர அஞ்சலி செலுத்தப்பட்டது.

வலி. வடக்கு காரியாதிகாரி திரு. பி. எல். பற்றிக்ஸ் தலைமையில் நடைபெற்றஇச்சுதந்திரதினவிழா ஆரம்பத்தில் அண்ணாவின் மரணம் குறித்து 2 நிமிட நேரமௌனஅஞ்சலிசெலுத்தப்பட்டது.

இவ் விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் அண்ணா பற்றிகுறிப்பிட்டுப்பேசினார்.

இவ்விழாவில் பேசிய பேச்சாளர் அண்ணாவின் சிறப்பு பற்றி குறிப்பிட்டுப் பேசினர்.

## "தமிழர் மறக்க முடியாத சேவைசெய்தவர்"

சித்தங்கேணி, வியாழன்

"தமிழர்களாகிய நாம் என்றென்றும் மறக்கமுடியாத அளவுக்குச் சேவை செய்திருக்கிறார் அறிஞர் அண்ணா" என்று வட்டுக்கோட்டை சிவன்கோவில் வீதியில்நடந்த திரு. அண்ணாதுரையின் அனுதாபக் கூட்டத்திற்குத் தலைமைவகித்த திரு. அ. க. குமாரசாமி கூறினார்

அண்ணாவின் திருவுருவப் படம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து கூட்டம் நடைபெற்றது.

திரு. மு. ந. சிவானந்தன் பேசும்போது "நால்வர் காட்டிய நல்வழியில் நின்ற உத்தமசீலர் அண்ணா என்றும், அறிவிலே தெய்வமாகிய அண்ணா தமிழர் நெஞ்சில் இடம்பெற்றுவிட்டார்" என்றும் கூறினார்.

ஆசிரியர் திரு. வ. சதாசிவம் பேசும்போது "அண்ணாவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுதலே, யாம் அவருக்குச் செய்யவேண்டிய சேவை" என்று கூறினார்.

"பகைவரையும், தன்னவராகக் கருதும் பெரும் உள்ளம் கொண்டவர் அறிஞர் அண்ணா என்றும், அவரைப் போன்ற சிறந்த தலைவரை இனிக் காண்பது அரிது" என்றும் ஆசிரியர் திரு. இ. கருணாநிதி கூறினார்.

"'தமிழ்நாடு' உள்ளவரை தமிழர் அண்ணாவை மறக்க மாட்டார்கள்" என்று பண்டிதர் க. மயில்வாகனனார் கூறினார்.

## முருகதாஸ் வருகிறார்

நாவலப்பிட்டி வியாழன்

பித்துக்குளி ஸ்ரீ முருகதாஸ்கோஷ்டியினர் இம் மாதம் 17-ந் திகதி இலங்கை வருகின்றனர். இதற்கான ஒழுங்குகளை நாவலப்பிட்டி ஆத்மஜோதி நிலையத்தினர் செய்துவருகின்றனர்.

இக்கோஷ்டியில் மிருதங்க வித்துவான் காரைக்குடி திரு. ஆர். மணி, தபேலா வித்துவான் திரு. எஸ். வாசுதேவ்ராவ் ஆகியோரும் வருகின்றனர். மூன்று வாரம் இலங்கையில் தங்கும் இக்கோஷ்டியினரின் நிகழ்ச்சிகள் மலையகத்திலும் இதர இடங்களிலும் நடைபெறும்.

## தைப்பூச உற்சவம்

உடுத்திரபுரம், வியாழன்

உடுத்திரபுரம் பாலையடிப் பிள்ளையார் கோவிலில் தைப்பூச உற்சவம் நடைபெற்றது. பகல் அன்னதானமும் விசேஷ அபிஷேகமும் இடம்பெற்றன. இரவு விசேஷ மேளக்கச்சேரிகளும் சங்கீதக்கச்சேரியும் நடைபெற்ற பின் முத்துச்சப்பறத்தில் அலங்காரவிநாயகர் வீதிவலம் வந்தார்.

## 16 அடி பள்ளத்தில் பாய்ந்த லொறி

கொழும்பு, வியாழன்

வீதியில் சென்றுகொண்டிருந்த லொறி ஒன்று குடைசாய்ந்து 16 அடி பள்ளத்தில் பாய்ந்து உடைந்த சம்பவம் கிருட்ணபாஸ் சந்திக்கருகாமையில் இரண்டு தினங்களுக்கு முன் நடைபெற்றது.

திடீரென வீதியைக் கடக்க ஒருவர் முயற்சி செய்த காரணத்தினாலேயே இந்த விபத்து ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது. விபத்து நேரத்தில் வண்டியில் பிரயாணம் செய்த சாரதியும் கிளீனரும் ஆபத்தான நிலையில் கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(வி. நி.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணி வாக்கு

வாயைத் திறவாமல் தங்கள் அறிவுக்கு எட்டின வகையில் சமயக்கொள்கைகளின் படி வாழ்க்கை நடத்துகிறவர்களை அவர்கள் எச்சமயத்தவராயினும் நான் மிகவும் பாராட்டுவேன். எளிய வாழ்க்கை நடத்தி ஏழைகளுக்கும் மற்றவர்களுக்கும் பணி செய்வதே உத்தமப்பிரசாரம்.

—மகாத்மாகாந்தி.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389,

யாழ்ப்பாணம், கீலக வருஷம் தை மாதம் 25-ந் திகதி
(7-2-69


## அண்ணுவுக்குப் பின்......

தமிழ்நாட்டில் ஆட்சி பீடத்திலுள்ள தி. மு. க. அரசாங்கம், முதல்அமைச்சர் அறிஞர் திரு. சி. என். அண்ணுதுரையின் மறைவுக்குப் பின் எப்படியிருக்கும் என்ற கேள்வி தமிழ் நாட்டில் மட்டுமல்ல இந்தியாவிலும் தமிழ் கூறும் நல்லுலகிலும் தோன்றியிருக்கிறது. 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்ற தாரக மந்திரத்தைக்கூறி கட்டுக்கோப்புக் குலையாமல் ஓர் இயக்கத்தை வளர்த்து வழி நடத்தி ஒரு சக்தியாக விளங்கியவர் மறைந்தும் விட்டார். 'அடுத்துஎன்னநடக்கும்?' என்ற கேள்வி எழுவதும் எந்த நாட்டிலும், எந்த அரசியல் கட்சியிலும் ஒரு தலைவர் மறைந்ததும் தலைமைப் பதவிக்குப் போட்டி ஏற்படுவதும் இந்தக் கேள்வி தோன்றுவதற்கு காரணமுமாகும். நேருவின் மறைவு காங்கிரசுக்கு எப்படி பலஹீனத்தை ஏற்படுத்தியதோ அதேபோல் அண்ணுவின் மறைவும் தி. மு. கழகத்துக்கு பலஹீனத்தை ஏற்படுத்தலாம். ஆனுலும் தி. மு. கவின் கட்டுக்கோப்புக் குலையாமலிருப்பதும், தமிழ் நாட்டில் தி. மு. க. அரசாங்கம் ஸ்திரமாகத் தொடர்ந்து ஆட்சி புரிந்து அண்ணு கண்ட கனவுகளை நிறைவேற்றுவதும் தி. மு. க. வின் இன்றைய தலைவர்களையே பொறுத்திருக்கிறது.

234 அங்கத்தவர்களைக் கொண்ட தமிழ்நாடு சட்ட சபையில் தி. மு. கழகத்துக்கு 138 ஸ்தானங்கள் உள்ளன. இது தவிர சுதந்திரா, கம்யூனிஸ்ட் அங்கத்தவர்களின் ஆதரவும் இருக்கிறது. காங்கிரசுக்கு 49 ஸ்தானங்களே இருக்கின்றன. ஆனுலும் அண்ணுவின் இடத்தை நிரப்புவதற்கு அவரைப்போல ஒருவர் இல்லையென்பதாலும் தி. மு. கழகத்துக்குள் தலைமைப் போட்டி ஏற்படலாமென்பதாலும், காமராஜர் தேர்தலில் வெற்றி பெற்றதன்மூலம் இழந்த செல்வாக்கை மீண்டும் பெற்றிருப்பதாலும் தமிழ் நாட்டில் விரைவில் மீண்டும் காங்கிரஸ் ஆட்சியை ஏற்படுத்துவதற்கு காங்கிரஸார் முயற்சி செய்யக்கூடும். இப்படிச்செய்வது ஆச்சரியமுமல்ல.

தி. மு. கழகத்தினர் தமக்குள் பதவிப் போட்டிகளுக்கு இடமளிக்காமல் அண்ணுவின் 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' என்ற கோட்பாட்டுக்கு அமைந்து ஒற்றுமையாக தமக்குள் ஒருவரைத் தலைவராகத் தெரிந்து அவருக்கு பூரண உதவியும் ஒத்துழைப்பும் அளிப்பதுடன், நாட்டின் நலன் கருதி, குறுகிய கட்சி மனப்பான்மையை விடுத்து, சகல அரசியல் தலைவர்களினதும், கட்சிகளினதும் ஒத்துழைப்பையும்பெறுவதற்கு தி மு.க. வினர் முயற்சிசெய்தால் அண்ணுவின் கனவு நிறைவேறும். தி. மு. கழகத்தின் புகழும் ஓங்கும், தமிழ் நாடும், தமிழ் கூறும் நல்லுலகமும் பயனடையும்.

## மதுவிலக்குக் கொள்கை

**1972-ம்** ஆண்டில் இலங்கையில் பூரண மதுவிலக்குக் கொள்கையை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு முதற்படியாக, மதுபான விற்பனைக்கு புதிதாக 'லைசன்ஸ்' வழங்குவதில்லையென்றும் காந்தி ஜெயந்தி நூற்றுண்டுடன் இலங்கை அரசாங்க விருந்து வைபவங்களில் மதுபானம் வழங்குவதில்லையென்றும், 'பர்மிட்' முறையில் மதுபானம் வழங்கும் திட்டத்தைக் கொண்டுவருவதெனவும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. இப்போதாவது இப்படியானதொரு தீர்மானத்தை மேற்கொண்டிருப்பதற்காக அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டும். பர்மிட்முறையில் மதுபானம் விநியோகிப்பது நல்ல திட்டம்தான். ஆனுல் மரவரி முறை அமுலிலிருக்கும் யாழ்ப்பாணப் பகுதியில் மதுவிலக்குக் கொள்கையை அமுல்நடத்துவது சம்பந்தமாக அரசாங்கம் எதையும் அறிவிக்கவில்லை. யாழ்ப்பாணப் பகுதியில் மதுவிலக்குத்திட்டம் அமுல் நடத்தப்படமாட்டாதா?

செனட்சபையில் மதுபான விற்பனைப்பகுதியை மூடிவிடுவதென்றும் அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. நல்ல யோசனை. மக்களுக்கு முதலில் வழிகாட்டவேண்டியவர்கள் தலைவர்களும் முதியவர்களும்தான். அரசாங்க விருந்துவைபவங்களில் மதுபானம் வழங்குவதை நிறுத்துவதும், ஆட்சிமன்ற மேல்சபையில் மதுபானம் வழங்கும் பகுதியை முடிவிடுவது மட்டும்போதாது. அமைச்சர்கள், ஆட்சிமன்றஉறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோர் இனிமேல் மதுபானம் அருந்துவதில்லையென்று பகிரங்கமாகவேசங்கற்பம்செய்துகொள்ளவேண்டியது அவசியம்.

நாடு முழுவதும் பூரண மதுவிலக்குக் கொள்கையை அமுல்நடத்துவதற்குக் காலக்கெடு விதிப்பதுடன் அதற்கான முழுத்திட்டங்களையும் விபரமாக அரசாங்கம் வெளியிடவேண்டியதும் அவசியம்.

# கண்ணியம் என்ற ...
# உண்மை உணர்ந்த...

# அஞ்சாமைஎன்பது அஹிம்சையின் வழிபிறக்கும் ஒரு நெறி

யாழ்ப்பாணம், வெள்ளி

'அஞ்சாமை என்பது அஹிம்சையின் வழி பிறக்கும் ஒரு நெறி. அறத்தை நம்பவும் மறத்தைத் தேய்க்கவும் அஞ்சாமையே ஆன்ற நெறிஇவ்வாறுதிரு.என்.கிரிதாரி பிரசாத் நேற்றுமுன்தினம் மாலை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நிகழ்த்திய உரையின் போது கூறினுர். டாக்டர் க. சிவஞானரத்தினம் தலைமையில் 'காந்தியடிகளும் அஞ்சாமையும்' என்னும் தலைப்பில் திரு. பிரசாத் உரைநிகழ்த்தினுர்.

இலங்கையில் காந்தி நூற்றுண்டு விழாக் கூட்டங்களில் உரைநிகழ்த்துவதற்காக திரு. பிரசாத் இலங்கை வந்திருக்கிருர்.

அவர் மேலும் கூறியதாவது:-

அஞ்சாமை குணங்களிலெல்லாம் தலைசிறந்தது என்று பகவான் கீதையில் தேவ அசுரசம்பத்து என்னும் 16-வது அத்தியாயத்தில் அஞ்சாமைக்கே முதல் இடம் தருகிருர். ஆண்டவனுக்கு அபயங்கரன் என்ற பெயருமுண்டு.

'அச்சமுடையார்க்கு அறன் இல்லை' என்பது வள்ளுவர் வாக்கு. 'அஞ்சாமை, ஈகை, அறிவுடைமை ஊக்கம் நான்கும் அஞ்சாமை வேந்தர்க்கு இயல்பு' என்புதும் வள்ளுவர் வாக்கு. நாவுக்கரசர்பெருமான் இடர்பட்ட காலத்தும் அஞ்சாமையே பற்றி நின்றுர். அவரை திருநீற்றறையில் இட்டபொழுதும், விஷம் கலந்த பால் அடிசிலை வழங்கிய பொழுதும், யானை காலால் இடற எண்ணிய பொழுதும், கல்லில்பூட்டிக் கடலில் பாய்ச்ச நினைத்த பொழுதும் அவர் கலங்காது அஞ்சாது அரசன் ஆணையையும் ஏற்க மறுத்து 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என்று பாடினுர். அஞ்சா நெஞ்சம் படைத்தவர்களே சைவர்கள். ஆண்டவன் ஒருவனைத் தவிர அவர்யார்க்கும் அஞ்சியதில்லை. அஞ்சுவது ஒன்றுமில்லை, அஞ்சவருவதுமில்லையென்றுர் அப்பர். 'உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை அச்சமில்லை' என்றுர் பாரதியார்.

அச்சமெல்லாம் தவிர்ந்தேன் அருள் அமுதம் உண்கின்றேன் என்றுர் இராமலிங்க சுவாமிகள்.

காந்தியடிகளின் வாரிசு என்று புகழ்பெற்ற நேரு தான் காந்தியடிகளிடம் கற்றபாடங்களில் நேர்மையும் அஞ்சாமையுமே தன்னைக் கவர்ந்தன என்றுஇயம்புகிருர். அச்சத்துக்கு அடிமையாகஇருந்தநமதுஅச்சத்தைப் போக்க விடுதலையை வழங்கியவர் காந்தியடிகள். அச்சத்தை அடிமையாக்கி, அடிமையின் அச்சம்போக்கி [illegible] காந்தியடிகள் [illegible] ருர், புதுயுகக் காந்தீயக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை. காந்தியடிகளின் 11 ஆச்சிரம விரதங்களில் அஞ்சாமையுமொன்று. ஆண்டவனின் வழி நிற்பவர்கள் அவனைத் தவிர வேறு யாருக்கும் அஞ்சக்கூடாது. அஞ்சாமை என்பது அஹிம்சையின் வழி பிறக்கும் ஒரு நெறி. அறத்தை ஓம்பவும் மனத்தைத் தேய்க்கவும் அஞ்சாமையே ஆன்ற நெறி சத்தியமே அதற்கு ஆதாரம் சத்தியமும் அஹிம்சையும் அஞ்சாமைக்கு வழிகோலும் கடல்பொங்கினுலும் கலங்கக்கூடாது. அண்டம் சிதறினுலும் அஞ்சக்கூடாது. யார்க்கும் அஞ்சாமல் எவர்க்கும் அஞ்சாமல் இறைவனுக்கே அஞ்சிவாழ்வோம்.

### சமய ஒழுக்கம்

நாயன்மார் காடு இராஜேஸ்வரிஅம்பாள்கோயிலில் நடைபெற்ற கூட்டத்தில் தவத்திரு பிரசாத் அவர்கள் காந்தியடிகளும் சமயமும் என்ற பொருள்பற்றி உரையாற்றியபோது சமய சமரசமே காந்தியடிகளின் நோக்கமென்றும், காந்தியடிகள் எல்லா சமயங்களையும் போற்றி புகழ்ந்து வாழ்ந்தார் என்றும் கூறினுர்.

சமய ஒழுககம் மிக்கவர்களுக்கு வடமொழி-தென்மொழியென்ற பாகுபாடு ஆரியன் தமிழன் என்ற உணர்வும், மேல்சாதி கீழ்சாதியென்ற நோக்... இருக்கஇயலாது எ...

தீண்டாமையும், மத... யும், மொழி ஒழிப்பும்... றிலும் சைவத்துக்கு... னவை. சைவமே ச... காந்திய...களின் நோ... அதுவேயென்று தி... சாத் மேலும்குறிப்பிட்...

கண்ணியத்துக்கு அதன்... கொண்டவர்களுட... செல்வதில் அவ... சமயத்துறையில் ... ருர். திரு. என். ... சாத் அண்ணு ப...

திரு. அண்ணுது... நானும் சென்னை பச்... பன் கல்லூரியில் ஒ...

# தமிழருக்கென ஒரு நாடு உண்டு என்பதை நிலைநாட்டி...

## அண்ணு மறைவுக்கு மேலும் அஞ்சல...

வல்வெட்டித்துறை, வியா.

தமிழுக்கும், தமிழகத்திற்கும் அறிஞர் அண்ணுசெய்த சேவை நாம் என்றுமே மறக்க முடியாதது. கடமை, கண்ணியம் கட்டுப்பாடு ஆகியவற்றைக் கடைப்பிடித்து தூங்கிக் கிடந்த தமிழ் மக்களை தட்டி எழுப்பினுர் அறிஞர் அண்ணு. மக்களின் அன்பைக் கொண்டு எழுத்தாலும் பேச்சாலும்மாணவ சமுதாயத்தை விழிப்புடையச் செய்தார். அதனுல் தமிழ்மக்கள் சமுதாயம் அவரின் சேவையை ஒரு போதும் மறக்கமாட்டாது. உலகத்திலுள்ள தமிழ்மக்கள் இன்று தமிழருக்கென ஒரு தமிழ்நாடு பெற்றுத் தந்த அண்ணுவை யிட்டு ஆருத்துயரில் அமிழ்ந்துள்ளார்கள்.

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் தமிழ்நாட்டு முதல் அமைச்சர் அறிஞர் அண்ணு மரணமானதையிட்டு நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு கூறினுர். இக் கூட்டத்திற்கு வல்வை பட்டினசபைத் தலைவர் திரு. எம். வி. இரத்தினவடிவேல் தலைமைவகித்தார். பருத்தித்துறை நகரசபைத் தலைவர் திரு. என். நடராசா பேசுகையில் தமிழ் பேசும் மக்களுக்காக ... ஞர் அண்ணு பெரு... ண்டு ஆற்றினுர். ... வாழ்நாள் மு... தும் மக்களின் நன்... காகவே பாடுபட்... சாதாரண மக்கள்கூ... ந்துகொள்ளக் கூடிய ... நூல்களை வெளியிட்... அண்ணு ...ங்களுக்கு ... காட்டிவிட்டு மறைந்... டார். அவர் காட்டி... யில் நாம் நடக்கப் ... கொள்ளவேண்டும்.

திருவாளர்கள் அத்தன்... பண்டிதர் பரந்தா... மனேகரன் மற்றும் சி... பேசினர்.

## 'ஒப்பற்ற உரிமை பெற்றுக் கொடுத்தவர்'

அளவெட்டி, வியாழன்

"கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றை உயிர் மூச்சாகக் கொண்டு தமிழகத்துக்கு அண்ணு விமோசனம் அளித்தது போல் எமது நாட்டுக்கும் விமோசனம்ஏற்பட அண்ணு போன்ற ஒரு தலைவர் தோன்ற வேண்டும்" காங்கேசன்துறையில் நடைபெற்ற ஓர் இரங்கற் கூட்டத்தில் உரையாற்றியவழக்கறிஞர் ஆர். என். சிவப்பிரகாசம் மேற்கண்டவாறு கூறினுர்.

தமிழக முதலமைச்சர் அண்ணுவின் மறைவு குறித்து காங்கேசன்துறை இளந்தமிழர் மன்றத்தினரால் காங்கேசன்துறை அம்மன் ஆலயத்துக்கு அருகாமையில் ஓர் இரங்கற் கூட்டம் நடத்தப்பட்டது.

அண்ணுவின் உருவப்படம் தாங்கிய மௌன ஊர்வலம் ஒன்று மாவிட்டபுரம் சந்தியில் ஆரம்பித்து கூட்ட ... கை சென்றடைந்தது.

காங்கேசன்துறைப்பட்டினசபைத்தலைவர் ஆ. வ. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில்திரு. ஆர். என். சிவப்பிரகாசம் தொடர்ந்து பேசுகையில்,

தனது நாட்டுக்கும், ஏழை எளியவர்களுக்கும் தன்னலமற்ற சேவைசெய்து உரிமை பெற்றது மாத்திரமல்லாமல் தமிழக தலைவருமாக அண்ணுவிளங்கினுர். "தமிழ் நாடு" என்ற ஒப்பற்ற உரிமை நாட்டுக்குப் பெற்றுக் கொடுத்தவர் அ...

மயிலை சிவ. சண்மு... சன் பேசுகையில், அ... பல துறைகளிலும் ... செய்ததோடு விட்டு... மல் ஏழை எளியவர்... கும் தன்னுலான ... செய்துள்ளார் என்று... ஞர்.

திரு. எஸ். செல்லத்... செல்வன் கருணைந்த ... உட்பட மற்றும்பலர் ... யாற்றினர்.

### பேரிழப்பு

உடுப்பிட்டி, புதன்

சென்னைக்குத் தமிழ்நாடு என்று பல எதிர்ப்புகளுக்கு கிடையே பெயரிட்டதினுல் உலகம் பூராவும் தமிழருக்கு ஒரு நாடு உண்டென்பதை விளங்கவைத்த அறிஞர் அண்ணுவின் மறைவு தமிழ் இனத்துக்கும் தமிழ் மொழிக்கும் பேரிழப்பாகும்' என்று உடுப்பிட்டித் தமிழ் மன்றம் காலஞ்சென்ற தமிழ்நாடு முதல் அமைச்சின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து விடுத்துள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தற்காலிக வேலைநீக்க...

கொழும்பு, விய...

எண்ணூறு ரூபா ... மதியான இ. போ. ச. ... டிக்கட்டுகளைக் களவ... தாக ஒரு பஸ் கண்ட... தற்காலிகமாக வேலைந... செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கொ... மீதோட்டமுல்ல... டிப்போவில் நடை... றது. சுமார் ஒரு ம... துக்கு முன்னர் டி... வில் களவாடப்பட்ட ... டிக்கட்டுகள் பஸ்ஸில் ... யாணிகளுக்கு வழ... பட்ட நேரத்திலேயே ... பிடிக்கப்பட்டதாகக் ... படுகிறது.

# சட...
# புதுப்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...சொல்லின் ...வர் அண்ணு

## ...சமயத்துறையில் ...துப்பாதை வகுத்தவர்

— கிரிதாரி பிரசாத் —

...க்கு அதன் உண்மையான மதிப்பை அளித்தவர் அண்ணு. கருத்து வேறுபாடு ...ண்டவர்களுடன் கூட மோதிக்கொள்ளாமல் தன்னுடன் அணைத்துக் கொண்டு ...வதில் அவருக்கு அவரே இணை. கடவுளைப் பற்றி அவர் அதிகம் பேசாவிட்டாலும் ...த்துறையில் புதியதொரு பாதையை வகுத்துக் கொண்டிருந்தவர் அண்ணு என்கி ...திரு. என். கிரிதாரி பிரசாத் அண்ணுவுடன் ஒன்ருகக் கல்வி பயின்ற திரு. பிர... அண்ணு பற்றி 'ஈழநாடு' நிருபரிடம் தெரிவித்ததை இங்கு தருகிருேம்.

...ண்ணுதுரையும் ...ன்னை பச்சையப் ...ரியில் ஒன்ருகக் கல்வி பயின்ருேம். கல்வி கற்கும் பொழுதே திரு. அண்ணு மிகத் தெளிந்த அறிவு பெற்றிருந்தார். எமது பேராசிரியர் கேட்கும் கேள்விகளுக்கு உடனுக்குடன் பதில் அளிக்கும் திறன் பெற்றிருந்தார், அண்ணு அப்பொழுதே பல மேல் நாட்டு நூல்களையும் கற்று அரசியல் அறிவு முதிர்ச்சி பெற்றிருந்தார்.

### சமயத் துறையில்

கடவுளைப் பற்றி அதிகம் பேசவில்லையாயினும் சமயத் துறையில் திரு. அண்ணுதுரை தமக்கென புதிய பாதையொன்றை வகுத்து அதைக் கடைப்பிடித்து வந்தார். சமயம் நல்லொழுக்கத்துக்கு முக்கிய இடம் அளிக்க வேண்டும் என்பதுவே அவரது கொள்கையாக இருந்து வந்தது. சமயம் மனிதனை மனிதனுடன் பிரிக்கப் பயன்படக் கூடாது என்பதை அவர் அடிக்கடி கூறிவந்தார். பிறரைவீணுக நோகவைக்காத போக்கு பிறருக்கு மதிப்பளிக்கும் எண்ணம் இதெல்லாம் அவருடன் ஒன்றிக் கலந்திருந்தன.

### சாதனை

நமது நாட்டில் போதனைகள் நிறைய இருக்கின்றன. இந்த அளவுக்கு சாதனையில்லையென்பதை அவர் சுட்டிக்காட்டி சாதனை நிகழ்த்துவதற்காக உழைத்தார். அதில் அவர் வெற்றியும் கண்டார்.

### கண்ணியம்

தம்முடன் கருத்து வேறுபாடு கொண்டுள்ளவர்களைக் கூட அவர் வரையறையின்றி வார்த்தைகளால் புண்படுத்த விரும்பவில்லை. தமது கட்சியினரைக் கூட இது விஷயத்தில் அவர் கட்டுப்படுத்தியிருந்தார் எனக் கூறலாம். சகிப்புத்தன்மையை வளர்த்துக் கொள்வதன் மூலமே நல்லவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது அவரது நம்பிக்கை.

அவருடைய பெருந் தலைவராகவிருந்த பெரியார் ஈ. வே. ராவை விட்டுப் பிரிந்த பின்னரும் கூட அவருக்கு திரு. அண்ணு பெரு மதிப்புக் கொடுத்து வந்தார். பெரியாரைப் பற்றி அவா எந்த சந்தர்ப்பத்திலும் கண்ணியக் குறைவாகப் பேசவில்லை. அத்தோடு தமது கட்சியைச் சார்ந்த எவரும் அவரைப் பற்றிக் கண்ணியக் குறைவாகப் பேசுவதையும் அவர் விரும்பவில்லை. முதலமைச்சர் பதவியேற்ற பின்னரும் கூட பெரியாருக்கு உரிய மதிப்பை அண்ணு அளித்து வந்தார். தாம் அவரைக் குருவாகக் கருதுவதாகக் கூறினுர். சில சமயங்களில் தமது கட்சிக்காரர்கள் பெரியாரைக் கண்டித்தபோது பெரியார் தந்தையென்றும் தந்தையை மக்கள் கண்டிக்கக்கூடாதென்றும் அவர் எடுத்துக்கூறினுர். இவ்விதம் கண்டனம் தெரிவித்ததற்காகத் தாமே மன்னிப்புக் கோரக்கூட அவர் தயாராக இருந்திருக்கிருர்.

திரு. இ. வே. ரா. காங்கிரஸை ஆதரித்து, காமராஜருக்காகப் பொது மேடைகளில் பேசிவந்த போதும்கூட அண்ணு எது விதமாகவும் கண்டிக்கவில்லை

### சமரச உள்ளம்

நான் திரு. அண்ணுதுரையை இறுதியாகக் கண்டது 1967ம் வருடம் அக்டோபர் 5ந் திகதியன்றுதான். அப்பொழுதுதான் அவர் முதலமைச்சர் பதவி ஏற்றிருந்தார். பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கத்தினுல் ஏற்பாடு செய்யப்பட்டு ராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்ற காந்தி விழாவில் நானும் கலந்திருந்தேன். வரவேற்புரையிலேயே திரு. அண்ணு எனது பெயரையும் குறிப்பிட்டுத் தம்முடன் நான் கல்வி கற்றதையும் சொல்லி, என்னை முதலில் பேசுமாறும் தமது பேச்சைப் பிறகு வைத்துக் கொள்ளலாமென்றும் எனக்கு அழைப்பு விடுத்தார்.

எனது பேச்சை 40 நிமிடங்கள்கேட்ட திரு. அண்ணுதுரை இதுபோன்ற பேச்சைத் தாம் எப்பொழுதுமே கேட்டதில்லையென்றும் தாய்மொழியை இந்தியாகக் கொண்ட ஒருவர் இதுவிதம் பேசமுடியுமென்ருல் வட நாட்டிலுள்ளவர்கள் தமிழ் மொழியை வெறுக்கக காரணம் தமக்குத் தெரியவில்லையென்றும், என்னை அனுப்பி வடநாட்டில் பிரசாரம் செய்யத் தாம் விரும்புவதாகவும் கூறினுர்.

### கடைசிச் சந்திப்பு

நான், தம்மை 36 ஆண்டுகள் சந்திக்காத காரணம் கேட்டார் அண்ணு. 'ஒதுங்கி நின்று அவரைப் போற்றவே விரும்பியதாலேயே நான் நேரில் சந்திக்க விரும்பவில்லை' என்றேன். எப்படியும் தமது வீட்டுக்கு வந்து போகுமாறு வற்புறுத்தி அழைத்தார் அண்ணு.

எனது தவக் குறைவுதான் இந்தச் சந்திப்புக்குப் பின் நான் அவரை மீண்டும் சந்திக்கமுடியவில்லை.

அண்ணுவின் மறைவை இங்கு கேள்விப்பட்டபோது என் மனம் சொல்லொணு வேதனையடைந்தது.

அமெரிக்காவில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த பொழுது அவர் குணமடைய வேண்டுமென அவருக்குக் கடிதம் எழுதியிருந்தேன். அவரை மீண்டும் ... பார்க்க எனக்குக் கொ...

...த்துவைக்கவில்லை. இது ஆருத துயர்.

### இழப்பு

ஒரு நல்ல மகனை, அரசியல் ஞானியை, நிறைந்த சீர்திருத்தவாதியை, நெருங்கிய நண்பனை இழந்துவிட்ட ... ...ந்துகின்றேன்.

---

...ற நோக்கமும் ...லாது என்ருர். ...மையும், மதவெறி ...ழி ஒழிப்பும் முற் ...சைவத்துக்குமாரு ...வமே சமரசம், ...ளின் நோக்கமும் ...ன்று திரு. பிர ...ம்குறிப்பிட்டார்,

## ...டு ...டினர் ...அஞ்சலி

...களுக்காக அறி ...ணு பெருந்தொ ...னுர். இவர் ...ள் முழுவ ...ளின் நன்மைக் ...பாடுபட்டார். ...மக்கள்கூட புரி ...க் கூடிய பல ...வெளியிட்டார். ...ங்களுக்கு வழி ...டு மறைந்துவிட் ...ர் காட்டிய வழி ...நடக்கப் பழகிக் ...ண்டும்.

...கள் அத்தண்ணு, ...பரந்தாமன், ... மற்றும் சிலரும் ...த்தவர் அண்ணு. ...சிவ. சண்முகதா ...கயில், அண்ணு ...களிலும் சேவை ...டு விட்டுவிடா ...எளியவர்களுக் ...லான சேவை ...ார் என்று கூறி

...ம.செல்லத்துரை, ...ருணந்த சிவம் ...ற்றும்பலர், உரை ...

## ...காலிக ...லநீக்கம்

...ழும்பு, வியாழன் ...று ரூபா பெறு ...இ. போ. ச. பஸ் ...ளைக் களவாடிய ...பஸ் கண்டக்டர் ...மாக வேலைநீக்கம் ...ட்டுள்ளார்.

...வம் கொழும்பு ...டமுல்லை பஸ் ...ல் நடைபெற் ...ார் ஒரு மாதத் ...ன்னர் டிப்போ ...டப்பட்ட இந்த ...ள் பஸ்ஸில் பிர ...க்கு வழங்கப் ...த்திலேயே கண்டு ...ட்டதாகக் கூறப் ...வி. நி.)

---

## ராமலிங்கமிஷன் தலைவர் திரு. மஹாலிங்கம் வருகிருர்

யாழ்ப்பாணம், வியாழன் இந்திய இராமலிங்க மிஷன் தலைவர் திரு. நா. மகாலிங்கம் இன்று கொழும்பு வருகிருர். இம் மாதம் 11-ந் திகதி வரை இலங்கையில் அவர் சொற்பொழிவுகள் நிகழ்த்த ஏற்பாடாகியிருக்கின்றது.

பொள்ளாச்சி திரு. நா. மகாலிங்கம் தென்னகத்தில் ஒரு பெருந் தொழிலதிபர். அண்ணல் காந்தியடிகளிடமும், அருட்பிரகாச வள்ளலார் இராமலிங்கசுவாமிகளிடத்திலும் பகவான் இராமகிருஷ்ணரிடத்திலும் பெரும் ஈடுபாடு கொண்டவர். இவர் தமிழகத்தில் பல கல்வி நிலையங்களை அமைத்து நிர்வகித்து வருகிருர். பொள்ளாச்சி மகாலிங்கம் கல்லூரியும் நாச்சிமுத்து பொறியியல் கல்லூரியும் இவர்களுடையது. இவர் கோவையில் ஒரு தமிழ்க் கல்லூரியையும் நடத்தி வருகிருர். இந்திய இராமலிங்க மிஷன் தலைவராயிருந்து சமயத்துறையில் ஒரு புத்துணர்ச்சியை ஊக்கி வருகிருர். வடலூரில் வள்ளலார் நிலையங்கள் கட்ட தன் சொந்த செலவில் 10 லட்சம் ரூபாய் தருவதாக சென்னை அரசினருக்கு அறிவித்துள்ளார். இவரது நன்கொடையால் பல நிலையங்கள் புதுப்பிக்கப்பெற்றுள்ளன. பவாரிங்கமோர் வார் ஆலயத்திற்கு ஒரு லட்சம் ரூபா நன்கொடையும் திருத்தேர் ஒன்று அமைக்க ஒரு இலட்சம் ரூபாயும் நன்கொடை வழங்கினுர். இரும்பு, சர்க்கரை, துணி ஆலைகளை நடத்தும் தமிழகத்தின் தொழில் அதிபர்களில் ஒருவராகத் திகழ்கிருர். மேல் நாடுகளுக்குப் பல முறை சென்று பொறியியல் பட்டம் பெற்று தமிழகத்தின் மிகச் சிறந்த அரசியல் ஆன்மீகத் தலைவராக விளங்குகிருர்.

---

## 'வீரக்குரல் ஓய்ந்துவிட்டது'

பண்டத்தரிப்பு, வியா.

நாலும் யாழும் ஏந்திக் கொண்டிருந்த தமிழக வாலிபர்களை வேலும் வாளும் ஏந்திக்கொண்டு சுதந்திரப் போராட்டத்திற்குத் தயாராகுங்கள் என அறைகூவல்விடுத்த அண்ணு நம்மை விட்டு மறைந்து விட்டார். வெள்ளம்போல் தமிழர் கூட்டம்வீரம்கொள் கூட்டம் அன்னுர் உடம்பினுல் பலரே அன்றி உள்ளத்தால் ஒருவர் ஆவோம் என்றும், ஒன்ருக வாழ்வோம் அன்றேல் ஒன்ருக மடிவோம் என்றும், முழக்கம் இட்ட குரல் ஓய்ந்து விட்டது.

தமிழ்நாட்டைத் தமிழர் ஆளவேண்டும், உலகம் வாழ் தமிழ் பேசும் மக்களின் இன்னல்கள் துடைக்க இன்பத் தமிழகத்தில் ஆட்சி நிறுவவேண்டும் என்று துடித்த உள்ளம் ஓய்ந்துவிட்டது. மதத்தின் பேரால் மக்கள் மயங்கி இருந்த மயக்கம் தெளிய அறிவுரை நல்கி அறியாமையைப் போக்கிமடமையை நீக்கிய சீர்திருத்தவள்ளல் அறிவின் சிகரம் எம்மைப் பிரிந்து விட்டார். தமிழ்பேசும் மக்கள் மத்தியில் ஆயிரம் ஆயிரம் வாலிபர்களைப் பேச்சாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும் ஆக்கித் தந்த அறிஞர் அண்ணு எம்மை விட்டுப் பிரிந்துவிட்டார்.

அவரின் பிரிவு உலகம் வாழ் தமிழ்ப்பேசும் மக்களின் பேரிழப்பாகும். அவர் விட்டுச்சென்ற கொள்கைகள் தமிழகத்தில் வளரட்டும். அவரின் இலட்சியங்கள் தமிழகத்தில் வெல்லட்டும் அவரின் அன்மா சாந்தியடைவதாக.

இவ்வாறு பண்டத்தரிப்பு கிராமசபைத் தலைவர் திரு. எஸ். கனகசபாபதி தமது அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

---

## அஞ்சலி

யாழ்ப்பாணம், வெள்ளி

திரு. அண்ணுதுரையின் மறைவுக்கு 18-ம் வட்டார மக்கள் அஞ்சலி செலுத்துமுகமாக கூட்டமொன்றை நடத்த விரிவான ஏற்பாடுகள் செய்துவருகின்றனர். இதனை முன்னிட்டு 18-ம் வட்டார மாநகரசபை அங்கத்தவர் திரு. வே. வி. தெய்வேந்திரனுக்களிக்கப் படவிருந்த வரவேற்பு வைபவம் ஒத்திவைக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

---

## மறுமலர்ச்சித் தலைவர்

வெள்ளவத்தை, வியா.

''எமது இதயக்கோவிலில் குடிகொண்டிருக்கும் பேரறிஞர் அண்ணு அவர்களின் இழப்பு பாரதத்திற்கு மட்டுமல்ல -ஈழத்திருநாட்டுக்கும் மாபெரும் நஷ்டமாகும். தமிழரின் மறுமலர்ச்சித் தலைவன் - இலக்கியச் செம்மல் - அன்பு அண்ணுவுக்கு எமது மனப்பூர்தமான அஞ்சலிகள்.''

மேற்படி செய்தியைத் தாங்கிய தந்தியொன்றை கொழும்பு ஐவர் வட்டத்தின் சார்பில் திரு. நெல்லை க. பேரன் தமிழக பதில் முதல்தர் திரு. இரா. நெடுஞ்செழியனுக்கும் அமரர் அண்ணுவின் அன்பு மனைவி ஸ்ரீமதி இராணி அண்ணுதுரைக்கும் அனுப்பிவைத்துள்ளார்.

---

(11-ம்கலத் தொடர்ச்சி)

யிரத நிலையத்தில் மடம் கட்டுவதாயின், அதில் தாம் தொண்டு செய்யத் தயாரென்றும், நடமாடும் தெய்வங்களான தொண்டருக்கு தொண்டு செய்வதே சிவபெருமானுக்கு மிக உகந்ததென்றும் தெரிவித்தார். இந்த மடம் சீக்கிரம் கட்டப்பட, பெருந்துறை மேயபிரானின் அருள் கிட்டிவிட்டதை உணருகின்றேன்.

0 0 0

கீதா போதகர், அருட்பா அரசு, பத்திரத்னம் கிரிதாரி பிரசாத் அவர்களிடம் ஈழத்துத் திருப்பெருந்துறையைப்பற்றிச் சொன்னேன். இதுவரை கேள்விப்படவில்லை என்றும் விவரம் தெரிவித்தால் இவ்விஷயத்தை தமிழகமெங்கும் தாம் பரப்பிவிடுவதாகவும் உற்சாகத்துடன் தெரிவித்தார். தமிழ்கூறும் நல்லுலகம் இதை ஒப்பிவிட்டால் ஈழத்தின் மகிமை எவ்வளவு உயரும்! அந்தநாள் நெருங்கி வருகிறதென்பதே என் திடமான நம்பிக்கை.

0 0 0

வந்திமையோர்கள் வணங்கியேத்த மாக்கருணைக்கடலாய், அடியார், பந்தனை விண்டற நல்கும் எங்கள் பரமன் பெருந்துறை ஆதி அந்நாள், உந்துதிரைக் கடலைக் கடந்தன்ருேங்கு மதிலங்கை அதனிற், பந்தனை எமல்வரலாட்கருளும் பரிசறிவார் எம்பிராணுவாரே.

— ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள்

---

## ஐயாறன் எழுதுவது

''கேதீஸ்வரநாதனின் மகிமையை வியந்து வியந்து ஆனந்தக் கண்ணீர் வடிக்கிறேன். முதல் நாள் நிலைக்க மறுநாள் கைகூடுவது ஆரால் நம்ப முடியும்?'' என்று அனுராதபுரத்திலே புகையிரத அதிகாரிகளில் ஒருவரான அன்பர் எழுதுகின்ருர்.

இந்த ஆண்டு சிவராத்திரிக்கு கேதீஸ்வரம், இல்லை, திருப்பெருந் துறைக்கு ரயிலில் செல்லும் யாத்திரீகர்களுக்கு சிற்றுண்டி வழங்க வேண்டுமென்றும், திருக்கேதீஸ்வர புகையிரத நிலையத்துக்கு அருகாமையில் ஒரு மடம் அவசியமென்றும், அதே அதிகாரி சென்ற வாரம் ரயிலில் என்னைத் 'தற்செயலாக' சந்தித்தபோது ஆர்வத்துடன் கூறினுர்.

மறுநாட்காலையிலே புகையிரதப் பகுதியைச் சேர்ந்த அதிகாரிகள் சிலர் தாமே அவரிடம் வந்து இதற்காக ஒரு சபையை நிறுவி வேண்டிய பணி செய்யலாமென்றனராம். இதற்கிணங்க சென்ற ஜனவரி 31ம் திகதி ''திருக்கேதீஸ்வரம் புகையிரத யாத்திரீகர் தொண்டர்சபை' ஸ்தாபித்தது டன், மதவாச்சி, திருக்கேதீஸ்வர புகையிரத நிலையங்களில், யாத்திரிகர்களை உபசரித்து அன்ன பானுதிகள் வழங்குவதென்றும், திருக்கேதீஸ்வரம் புகையிரதநிலையத்துக்குப் பக்கத்தில் யாத்திரிகர் தங்குவதற்கு ஒரு மடம் அமைப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டதாயும், இந்த நோக்கத்துக்கு கொழும்பு கதிர்காம யாத்திரிகர் தொண்டர்சபை போன்றவைகளின் உதவி கிட்டுமானுல் அடுத்த ஆண்டில் மடம் உருவாகலாம் என்றும், முதல் நாள் நினைத்தது மறுநாள் கைகூடும் அதிசயத்தை நம்ப முடியவில்லை என்றும் உள்ளம் உருக எழுதுகின்ருர் அந்த அன்பர்.

0 0 0

இக்கடிதத்தைப் படித்த பின் கேதீச்வரநாதனின், இல்லை திருப்பெருந்துறை மேவிய பெருமானின் அருளை மனதில் வியந்து கொண்டிருக்கையில் இங்குள்ள ஓர் அன்பர் சிவராத்திரிக்கு கேதீச்சரத்துக்குச் செல்லப் போகிறீர்களா? என்று அன்புடன் விசாரித்தார். ஏனென்று கேட்டதற்கு திருக்கேதீச்சரத் திருப்பணிக்கு இவ்வாண்டு சந்தா செலுத்த வேண்டியிருப்பதால் அதைக் கொண்டு சேர்ப்பதற்கே என்ருர். அவர் சணல்நூல் சுற்றி சீவனம் நடத்தும் ஓர் ஏழைதான். வருடாவருடம் என் மூலம் திருப்பணிசபைக்கு சந்தா அனுப்பி வந்தவர். சமீபத்தில் குடும்பத்தை தலைமன்னுர் மூலம் இந்தியாவுக்கு அனுப்பிவிட்டு, திருக்கேதீசரத்துக்கு இல்லை திருப்பெருந்துறைக்குச் சென்று தரிசித்துவிட்டு வந்தாராம். அவருக்குத்தான் கேதீஸ்வரத்தின்மீது எவ்வளவு பக்தியும் நம்பிக்கையும்!

அனலைதீவைச் சேர்ந்த ஒரு பெரியார் இப்போது, திருப்பெருந்துறையில் (இனி திருக்கேதீஸ்வர திருப்பணிச் சபையாரும், இப்பெயரை ஏன் பயன்படுத்தக்கூடாது) தமிழ் பள்ளிக்கூடத்துக்கு முன்னுல் பாலாவியின்கரை மீது ஆசிரமக் கொட்டிலில் வசித்து வருகிருர். அவர் பெயர் சொக்கலிங்கசுவாமிகள். பென்சனர். தூய தவ வாழ்வு வாழும் அவரிடம் மேற்குறித்த கடிதத்தைக் காட்டினேன். அவர் புகை

(10-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 'மனிதர் யாவரும்சமம் என்றநோக்கம்கொண்டவர்'

தெல்லிப்பழை, வியாழன் " 'கற்ககசடறக்கற்க, கற்றபின் நிற்க அதற்குத்தக' என்னும் தெய்வப்புலவரின் வாக்கிற்கு இணங்க வாழ்ந்தவர் திரு. அண்ணாதுரை. சமதர்மக் கொள்கையை சரிவரக்கடைப்பிடித்தொழுகியவர். மனிதர்யாவரும் சமம் என்னும் நோக்கம் உடையவர் தமிழ்மொழியை சரிவரக்கற்று அதை உலகெலாம் பரவவேண்டுமென்னும் அக்கறை உள்ளவர். அரசியல்துறையில் மட்டுமன்றி இலக்கியத்திலும் வல்லவர். அறிவித்துறையில் ஞானியாகவிளங்கியவர். எத்தனையோ ஆயிரக்கணக்கான வாலிபர்களை-வயோதிபர்களை-பெண்களை தனது கருத்துமிக்க பேச்சுக்களால்-எழுத்துக்களால் கவர்ந்து, தான் கொண்டகொள்கையை தராணிக்கேஉணர்த்தியவர் அண்ணாஅவர் மறைவு தமிழினத்துக்கே ஒருபேரிடி, அவர்விட்டுச் சென்ற பணியை-தமிழக அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல நமது தலைவர்களும் செய்துகாட்டுவதுதான், நாம் அவருக்குச் செய்யும் மகத்தானகடமையாகவிருக்கும்; இதனுலேயே அவரது ஆன்மா சாந்தியடையும்.'

யாழ். இளைஞர்கழகம், காலஞ்சென்றதமிழக முதல் மந்திரி திரு. அண்ணாதுரையின் மறைவையொட்டி அனுதாபம் தெரிவிக்கும் முகமாக திருநெல்வேலி கணக்கியல் கல்லூரிமண்டபத்தில் நடாத்திய கூட்டத்தில் ஓய்வு பெற்ற வித்தியாதரிசி திரு. எம். நாகலிங்கம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். இளைஞர்கழகத்தலைவர் திரு. இரத்தினகோபால் தலைமைவகித்துப் பேசுகையில், திரு. அண்ணா நாட்டிற்காகப் பிறந்தார், நாட்டிற்காக வாழ்ந்தார், நாட்டிற்காகவே சேவை செய்துகொண்டிருக்கையிலேயே உயிர்துறந்தார். நான் சென்னையில் கல்விபயிலும் காலத்தில் அவர் பேசும் பல கூட்டங்களில் கலந்து அவர் பேச்சைக் கேட்டதுண்டு. பல்லாயிரக்கணக்கான மக்கள் அவர் பேச்சைக் கேட்க தவம் கிடப்பார்கள். அவ்வளவு அறிவும் பேச்சுவன்மையும் கொண்டவர் அவர் என்று கூறினர்.

வைத்தீஸ்வர வித்தியாலய கனிஷ்ட கல்லூரி அதிபர் திரு. ரி. சங்கரப்பிள்ளை பேசுகையில், "திரு. அண்ணாதுரை ஓர் ஒப்புயர்வற்ற தலைவர். கடமை கண்ணியம் கட்டுப்பாடுடிடன் வாழ்க்கையில் வாழ்ந்து காட்டியவர். அண்ணா பெரிய பணக்காரக்குடும்பத்தில் பிறந்தவரல்லர். மிகவும்கஷ்டப்பட்ட குடும்பத்தில் பிறந்து இலகு

(7-ம்பக்கம் பார்க்க)

# தமிழ்மக்கள் அனைவரும் ஒன்ருகவேண்டுமெனவிரும்பியவர்

## அண்ணாவின்பிரிவுக்கு நாடெங்கும்அஞ்சலி

வெள்ளவத்தை, வியாழன் "அமரர் அண்ணாவின் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற மூன்றையும் நாம் காப்பாற்றுவோம். அவர் சொல்லித் தந்த பண்பைப் போற்றுவோம். அண்ணாவுக்கு அஞ்சலிசெய்ய, இங்கு கூடியுள்ள சகல கட்சித் தலைவர்களுக்கும் எமது இலங்கைத் திராவிட முன்னேற்றக்கழகம் நன்றி செலுத்துகிறது."

இவ்வாறு இலங்கை திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் திரு. ஏ. எஸ். மணவைத்தம்பி கொழும்பு செட்டித்தெருவில் நடைபெற்ற அமரர் அறிஞர் அண்ணாவின் இரங்கற் கூட்டத்திற்குத் தலைமைவகித்துப் பேசுகையில் கூறினர்.

மட்டக்களப்பு எம். பி. திரு.செ.இராசதுரை பேசுகையில் "தென்னகத்தின் காந்தி-தமிழர்களின் ஒளிவிளக்கு இன்று அணைந்துவிட்டது. அண்ணாவின் மரணச் செய்தி எமக்கு ஆருத துயரைத் தந்தது. அண்ணாவின் வழியை நாம் பின்பற்றுவோம்" என்ருர்.

தமிழரசுத் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசுகையில் "நான் அமரர் அண்ணாவுக்கு எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதில் திருப்தியடைகிறேன். திரு.அண்ணாதுரையின் இறப்புக்காகத் தமிழ் மக்கள் உலகம் பூராவும் துக்கம் கொண்டாடுகிருர்கள். அவர்களோடு நாமும் கலந்துகொள்வோம். அண்ணாவின் அகால மரணம் எங்கள் எல்லாருக்கும் பெரிய வீழ்ச்சியாகும். 59 வயது ஒரு பெரிய வயதல்ல. அவர் இன்னும் குறைந்தது 20 வருடங்களுக்கு இருந்திருந்தால் அவர் எடுத்த முயற்சிகள் எவ்வளவோ கைகூடியிருக்கும்" என்று கூறினர்.

சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசுகையில் "தமிழர்கள் நெஞ்சங்களில் அண்ணாவின் நினைவும், அவரது அன்பு உருவமும் பசுமையாகப் பதிந்துவிட்டது. அவரைத் தமிழுலகம் என்றும் மறக்க முடியாதபடி பல நினைவுகளை ஏற்படுத்திவிட்டுச் சென்றுவிட்டார். அண்ணாவின் எழுத்து, பேச்சு, நடிப்பு, ராஜதந்திரம் அனைத்துமே எமக்கு நல்ல வழிகாட்டிகள். அவற்றை நாமும் மறவாது வளமான வாழ்வுபெற முயல்வோம்" என்ருர்.

முன்னாள் உள்ளூராட்சி அமைச்சர் திரு. மு. திருச்செல்வம் பேசுகையில் "அண்ணாவின் மறைவைக் கேட்டுத் தமிழர்கள் இன்று இரத்தக்கண்ணீர் வடிக்கிருர்கள்" என்று கூறினர்.

தமிழகத்திலிருந்து வந்த முஸ்லிம் லீக் தலைவர் திரு. கே. எஸ். ஈ. குலாம்முகைதீன் பேசுகையில் "வேறு விஷயமாக இலங்கை வந்துள்ள நான் இங்கு நடக்கும் அஞ்சலிக் கூட்டத்திற்கு ஒரு பார்வையாளராக வந்தேன். ஆனுல் இலங்கை மக்களின் ஆராத பற்றைக் கண்ட நான் எனது அஞ்சலியையும் இங்கு செலுத்த விரும்பியுள்ளேன். தமிழகத்தில் தமிழக முஸ்லிம்களுக்கும்-இந்திய முஸ்லிம்களுக்கும் அறிஞர் அண்ணா அவர்கள் நீதிமானுக விளங்கினுர். தமிழக மக்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டுமென்ற கொள்கையை ஏற்றுக்கொண்ட ஒரே தலைவர் திரு. அண்ணாதுரைதான். ஆளும் பிரச்னையில் மக்கள் அனைவரும் ஒன்றுபடவேண்டும் என்பதே அண்ணாவின் கருத்து" என்ருர்.

தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜி.ஜி.பொன்னம்பலம் ஆரம்பத்தில் கூட்டத்திற்கு வந்து தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டார்.

இலங்கைத் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திரு. ஏ. இளஞ்செழியன் பேசுகையில் "இருபதாம் நூற்ருண்டின் தமிழர் ஜோதி- அறிவுமலை- அறிஞர் அண்ணா இன்று எம்மைவிட்டுப் பிரிந்துவிட்டார். உலகத் தமிழர்களே அழுகிருர்கள். அவரைப் போன்றதோர் இலக்கியச் செம்மலை அரசியல் விற்பன்னரை-தமிழரின் தியாகியை இனி எப்போது காணப்போகின்ருேம். உலகெங்கிலும் உள்ள தமிழர்கள், அண்ணாவின் பரந்த -அறிவு செறிந்த கொள்கைகளைப் பின்பற்றி அவரது இலட்சியக் கனவுகளுக்கும், ஆத்மாவுக்கும் சாந்தியளிப்போமாக" என்ருர்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த செனட்டர் ஆர். ஜேசுதாசன், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸைச் சேர்ந்த திரு. எம். கணேஸ் உட்படப் பலர் உரை நிகழ்த்தினர்.

## தமிழ் உரைக்கு புது மெருகூட்டியவர்

வெள்ளவத்தை, வியாழன் "தமிழர்வரலாற்றிலேயே மிகவும் சோகம்படிந்த அத்தியாயத்தை உருவாக்கிவிட்டு அறிஞர் அண்ணா அமரராகிவிட்டார். அவரது பெயரால் தமிழர்கள் பெருமையடைந்தனர். அவரது செயல்களாலும், எழுத்துக்களாலும், பேச்சாலும் தமிழர்கள் புதுவாழ்வுபெற்றனர். இன்று எம்மையெல்லாம் பிரிந்து அவர் சென்றுவிட்டார். மிகக்குறுகிய காலத்திலேயே பேரொளி பரப்பி மறைந்து விட்டார். அவர் பரப்பிய தமிழ் வெள்ளம் உலகம் எங்கணும் பரந்துள்ள தமிழர் மத்தியில் பரவத்தான் போகிறது. அவர் நினைவால் மீண்டும் நாம் புதுவாழ்வு பெறுவோம்."

இவ்வாறு மட்டக்களப்புக் கவிஞர் திரு. காசி ஆனந்தன் கொழும்பு விவேகானந்த மேட்டில்நடைபெற்ற அண்ணாவின் இரங்கற்கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர்.

திரு. எஸ். பொன்னுத்துரை பேசுகையில் 'அறிஞர் அண்ணா தமிழ் உரைநடைக்குப் புது மெருகையூட்டியவர். இன்று ஆயிரமாயிரம் பேர் எழுத்திலும்பேச்சிலும் அவரது அழகு நடையைப் பின்பற்றுகிருர்கள். அண்ணாவின் இழப்பு தமிழர்களுக்கு மட்டும் நஷ்டமல்ல; ஒரு மாபெரும் இலக்கியகர்த்தாவை இந்தஉலகம்இழந்துவிட்டது. அண்ணாவின் அரிய பலசிருஷ்டிகள் இனிமேல்தான் வெளிப்படும் தறுவாயில் இருந்தன எனலாம். எல்லார் நெஞ்சிலும் நிறைந்த அண்ணா இன்று எல்லோரையும் அழவைத்துப்போய் விட்டார்' என்ருர்.

இ. தி. மு. க. வைச்சேர்ந்த திரு. இளஞ்செழியன், திரு. ஈழவேந்தன் ஆகியோருட்படப் பலர் பேசினர்.

## தென் ஆபிரிக்காவுக்கு நாய் செல்கிறது

திருகோணமலை, புதன் இலங்கையிலிருந்து தென்னுபிரிக்காவுக்குப் பயணமாகிறது ஒரு நாய். இந்த நாயின்பெயர் 'படி'யாகும். தென்னுபிரிக்காவில் வசிக்கும் திரு.பிறௌனின் குடும்பத்துக்குச் சொந்தமான இந்தநாய்கொழும்பிலிருந்து திருக்கோணமலைக்கு கொண்டுவரப்பட்டு இங்கு தேயிலை ஏற்றுமதிக்காக வந்து தங்கி நிற்றும் நோர்த்பாங் என்னும் சரக்குக்கப்பலில்பயணமாகின்றது. தனிமையலேயே செல்லும் இந்த நாய் 18 நாட்களுக்குப் பிரயாணம் செய்யவேண்டியிருக்கும்.

சங்கானையில்

## சுதந்திர தின விழா

சங்கானை, புதன் "கடந்த பலவருடங்களாகக் கொண்டாடி வரும் சுதந்திரதினவிழாவில் இப்பகுதி மக்கள் இளைஞர்கள், உட்பட விளையாட்டுக்கழகங்கள் காட்டிவரும் ஆர்வம் மெச்சத்தக்கது. கழகங்களின் ஒத்துழைப்பே இப்போட்டி சிறப்பாக நடாத்துவதற்கு ஏதுவாக அமைந்துள்ளது." என்று சங்கானையில் நடைபெற்ற சுதந்திர தினவிழாவில் தலைமைவகித்துப் பேசிய வலி-மேற்குக் காரியாதிகாரி திரு. என். மாணிக்கநடராசா குறிப்பிட்டார்.

காலை 7 மணிக்கு சரியாக காரியாதிகாரி காரியாலயத்தில் தேசீயக் கொடியை திரு. மாணிக்க நடராசா ஏற்றி வைத்தார். இதைத் தொடர்ந்து பொலிஸ் நிலையமுன்றலில் சயிக்கள் ஓட்டப் போட்டி, கரபந்தாட்டப்போட்டி ஆகியன நடைபெற்றன. திரளான மக்கள் இவ்விழாவில் கலந்துகொண்டனர். வலிமேற்கு விளையாட்டு இயக்குனர் திரு. ரி. நடராசா போட்டிக்கு ஒத்துழைத்த சகல கழகங்களுக்கும் நன்றி கூறினுர். ஆசிரியர் திரு. தேவகடாட்சம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் பேசினர்ர்.

வெற்றியீட்டியோர்க்கு காரியாதிகாரி திரு. மாணிக்க நடராசா பரிசில்கள் வழங்கினுர்.

## 'கரையில் நிற்பவர்கள்தான் கைதூக்கி விடவேண்டும்'

உடுப்பிட்டி, வியாழன் "தெரிந்தோதெரியாமலோ ஒரு சமூகம் பள்ளத்தில் தள்ளப்பட்டு விட்டது. கரையில் நிற்பவர்கள்தான் அவர்களைக் கைதூக்கிவிடவேண்டும். வீழ்ந்து கிடப்பவர்களும் ஏறுவதற்கு முயற்சி செய்தால்தான் வெளியில் நிற்பவர்களின் உதவியுடன் கரையேற முடியும்." என்று திரு. ஆ. ம. செல்வத்துரை ஆசிரியர் வடமராட்சி சமூக சேவா சங்கம புனரமைப்பு விழாவிலும் வருடாந்த விழாவிலும் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் கூறினுர். இக்கருத்தரங்கு சைவப்புலவர் திரு. சி. வல்லிபுரம் தலைமையில் வதிரி வடக்கு மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் நடைபெற்றது.

திருவாளர்கள் த. இரத்தினம் க முருகேசு, க. நவரத்தினம், வ. தர்மலிங்கம், த. தணிகாசலம், ஐ. க. மாணிக்கம், ச. சதானந்தன், ஆ. கதிரவேலு ஆகியோரும் கருத்தரங்கில் கலந்துகொண்டனர்.

## பிரிவுபசாரவிழா

அளவெட்டி, வியாழன் "இலங்கையில் விவசாயப்படை முகாமுக்கும், நீர்ப்பாசன இலாகாவுக்குமிடையில் வேலை விடயங்கள் பற்றி மோதல்கள் ஏற்பட்டிருக்கின்ற வேளையில் விசுவமடு விவசாயப்படை முகாமின் வேலைகளில் கிளிநொச்சிப்பிரிவு நீர்ப்பாசன உத்தியோகத்தர்கள் அதிக ஒத்துழைப்பைத் தந்துள்ளார்கள்."

இவ்வாறு விசுவமடு விவசாயப்படை முகாம் அதிபர் திரு. கணேசன் கிளிநொச்சிப்பிரிவு நீர்ப்பாசன இலாகாவில் தொழில்நுட்பஉதவியாளராகக் கடமையாற்றி அநுராதபுரத்துக்கு இடமாற்றலாகிச்செல்லும் திரு. ரி. சுப்பிரமணியத்துக்கு விசுவமடு விவசாயப்படை முகாம் வீரர்களால் அளிக்கப்பட்ட பிரிவுபசாரவிழாவில் கூறினுர்.

இவ்விழாவில் நீர்ப்பாசன இலாகா ஓவசியர் திரு. இராசரத்தினம் உதவித் தொழில் நுட்ப ஆணையாளர் திரு. பாலசுந்தரம், திரு. சச்சிதானந்தம், புதிய தொழில் நுட்ப உதவியாளர் திரு. பூபாலசிங்கம் ஆகியோரும் அன்னுரின் சேவையைப் பாராட்டிப் பேசினர்.

உறுதியானதும் நீடித்து உழைப்பதும் தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு—பித்தளை மர ஸ்குரு ஆணிகளை

நீங்கள் வாங்குவதனுல் ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள் என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்கள்:

என். வைத்திலிங்கம்நிறுவனத்தார்

இரும்பு வியாபாரிகள்

450, பழைய சோனகதெரு — கொழும்பு-12

தொலைபேசி: 7143 — 2029

கிளை- 138, கே. கே. எஸ். வீதி — யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 530

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மென்பந்து கிரிக்கெட் போட்டி

யாழ்ப்பாணம், வியா.

இம்மாதம் 9-ம் திகதி நடக்கவிருக்கும் மென்பந்து கிரிக்கெட் போட்டியுடன் அரியாலை சுதேசிய திருநாட் 'பொன்விழா' விளையாட்டுப் போட்டிகள் ஆரம்பமாகவிருக்கின்றன.

கடந்த வருடங்களில் சாம்பியனாக வந்த 'யங்லயன்ஸ்' குழுவில் திறமையாக விளையாடிய இம்மனுவல், லூயிஸ் உட்படப் பல பிரபல விளையாட்டு வீரர்கள் அடங்கிய எட்டு விளையாட்டுக் கழகங்கள் மென்பந்து கிரிக்கெட் போட்டியில் பங்கு பற்றுகின்றன. அத்துடன் யாழ். நகரில் பிரசித்தி பெற்ற கிரிக்கெட் கோஷ்டிகளிலொன்றான 'சூட்டிங்ஸ்' விளையாட்டுக் கழகமும், 'கிறீன்பீல்ட்' விளையாட்டுக் கழகம் ஆகிய கோஷ்டிகளும் பங்குபற்றுகின்றன. (தே. நி)

## 66 மைல் சைக்கிள் ஓட்டம்

யாழ்ப்பாணம், வியா.

அரியாலை சுதேசிய திருநாட்கொண்டாட்ட 'பொன்விழா'வையொட்டி ஏப்ரலில் 66 மைல் அகில இலங்கைச் சைக்கிள் ஓட்டப் போட்டியொன்றும் நடாத்தப்படவுள்ளது.

'ஸ்டாண்டட் சைக்கிள்'களே அனுமதிக்கப்படும். இப்போட்டியில் அகில இலங்கையிலிருந்தும் போட்டியாளர்கள் பங்கு பற்றுகிறார்கள். போட்டியில் வெற்றி பெறுவோருக்குக் கேடயங்கள், சைக்கிள்கள் உட்பட பெறுமதியான பரிசில்கள் பரிசளிக்கப் படவிருப்பதாக விழாக் காரியதரிசி தெரிவித்தார். (தே. நி)

## போட்டியில் வெற்றிபெற்றோர்

சங்கானை, வியா.

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி பிரிவில் சுதந்திர தின விழாவை ஒட்டி நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளின் முடிவுகள்:

சையிக்கிள் ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டிய முதல் ஐந்து பேர்கள்: பி. மரியதாஸ் பண்டத்தரிப்பு, கே. நித்தியானந்தன் ஆனைக்கோட்டை, கே. சிவபாலன் மானிப்பாய், என். துரைச்சாமி குஞ்சகலட்டி, கே. பரமேஸ்வரம் சுழிபுரம்.

கரப்பந்தாட்டப்போட்டி: வலிகாமம் மேற்கில் இரு பிரிவுகளாக நடாத்தப்பட்ட போட்டியில் 'ஏ' பிரிவில் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகமும், 'பி' பிரிவில் நவாலி சென். பீற்றஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன. பலத்த விறுவிறுப்பான போட்டியில் நவாலி சென். பீற்றஸ் கழகத்தினர் முறையே 14-14, 3-15, 15-10 புள்ளிகளைப் பெற்று வெற்றிக் கேடயத்தைத் தட்டிக் கொண்டனர். சென். பீற்றஸ் கழகத்தாருக்கு செல்வன் கே. தர்மசீலனும் சுதுமலை நாவலர் கழகத்தாருக்கு செல்வன் எஸ். குணரத்தினமும் தலைமை தாங்கினர். சங்கானை பொலிஸார் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டிக்கு பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை போதனு ஆசிரியர் திரு. எஸ். எம். ஆறுமுகம் நடுநிலைமை வகித்தார்.


**கலா தையல் பயிற்சிச் சாலை**

330, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

ஃ நவீன விஞ்ஞானமுறையில் தையல் கலை பயில பெண்களுக்கு ஓரிடம்.

ஃ 3 வகையான நேரங்களில் வகுப்புகள் நடைபெறுகின்றன.

ஃ விண்ணப்பியுங்கள்.


## உதயசூரியன் வென்றது

சித்தங்கேணி, வியாழன்

சித்தங்கேணி உதயசூரியன் விளையாட்டுக் கழகத்திற்கும் சித்தங்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சித்தங்கேணி ''உதய சூரியன்'' விளையாட்டுக் கழகம் 4 2 கோல்களால் இளைஞர் முன்னேற்றக் கழகத்தை வெற்றியீட்டியது. விறுவிறுப்பான இப்போட்டி மூளாய்றேட் கம்மோனியன் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

## புதிய நிர்வாகிகள்

கோப்பாய், வியா.

கோப்பாய் சூரியோதய ஐக்கிய நெசவாளர் சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. கே. செல்வவினாயகம், உப-தலைவர்: திரு. வி. கந்தையா, செயலாளர்: திரு. ஆர். கோபாலசிங்கம், உப செயலாளர்: திரு. வி. தம்பியப்பா, பொருளாளர்: திரு. கே. செல்லையா.

4 பேர் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## சொற்பொழிவு

பம்பலப்பிட்டி, வியாழன்

வெள்ளவத்தை ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நாளை இரவு 7-30க்கு 'ஸ்ரீராமகிருஷ்ண பரஹம்சரும் ஸ்ரீ ராமலிங்க சுவாமிகளும்' என்னும் பொருளில் ஸ்ரீ என், மகாலிங்கமும் வரும் 10-ம் திகதி மாலை 6 மணிக்கு 'மகாத்மாகாந்தி அடிகளும்' ஸ்ரீ ராமகிருஷ்ண பரஹம்சரும் என்னும் பொருள்பற்றி ஸ்ரீ என் மகாலிங்கமும் ஸ்ரீ. என். கிரிதாரி பிரசாத்தும் சொற்பொழிவாற்றுவார்கள்.

**மனிதர் யாவரும்**

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வில் மக்கள் யாபேரையும் தனது அறிவுச் சுடரால்-வசப்படுத்தி; ஆட்சியேற்று தமிழுக்கும், தமிழ்நாட்டுக்கும், சேவைசெய்து - தன் வாழ்வை அர்ப்பணித்ததியாகச் செம்மல். அவர் இழப்பு தமிழர்களாகிய எங்களுக்கெல்லாம் பேரிழப்பு'' என்று கூறினார்.

திருநெல்வேலி சைவமுன்னேற்றக் கழகத்தலைவர் திரு. தனபாலசிங்கம் பேசுகையில், எல்லாமதத்தினராலும்போற்றப்பட்ட அண்ணா அனைவரையும் ஆருத்துயரக் கடலில் ஆழ்த்திவிட்டு சென்றுவிட்டாரெனக் கூறினார்.

செல்வி பாலசுப்பிரமணியம் பேசுகையில், ''ஆங்கிலேயரால் 'மெட்ருஸ் ஸ்டேட்' என்று வழங்கிவந்தபெயரை திரு. அண்ணாதுரை முதன் மந்திரியாக வந்த உடனே 'தமிழ்நாடு' என்று மாற்றித்தந்தார். இதை தரணியெங்கும் வாழும் தமிழர்கள் நினைத்து பெருமிதப்படும் வேளையில் நம்மை விட்டுப் பிரிந்து சென்று விட்டார். தமிழர்களாகிய நாம் எங்கெங்கு வாழ்ந்தாலும் 'தமிழ்நாடு' ஒன்று இருக்கிறது என்று அந்த ஒரு பெருமையே அண்ணா அவர்களை சதா நினைவூட்டிக் கொண்டிருக்கும்' என்றார்.

செல்வி பரமசாமி, திரு. தில்லைநாதன் ஆகியோரும் அண்ணாவுக்கு அஞ்சலி செலுத்தினர். யாழ். இளைஞர் கழக சார்பில் பதில் முதல் அமைச்சர் திரு. நெடுஞ்செழியனுக்கு அனுதாபச் செய்தி அனுப்பி வைக்கப்பட்டது.

## சமயப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வியா.


ஜனவரி மாதம் சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம் சைவசமய அபிவிருத்திக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட சைவ சமய கட்டுரைப் போட்டியில் பின் வருவோர் வெற்றி பெற்றனர்.

**மத்திய பிரிவு**

1-ம் பரிசு: திரு. ஆர். செல்வவடிவேல், 2-ம் பரிசு: நகுலாம்பிகை. 3-ம் பரிசு: கி. சிவபாலன்.

**மேற்பிரிவு**

1-ம் பரிசு: பி. ராஜேஸ்வரன், 2-வது பரிசு: எஸ். கிருஷ்ணமூர்த்தி, 3-வது: வே. குணரஞ்சிதம்.


எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்

**AGENTS**

# றேயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென்னேயில் நடக்கும்
# அண்ணு அனுதாப கூட்டத்தில் திருமதி இந்திரா பேசுவார்

சென்னே, பெப் 6 பேரறிஞர் அண்ணுதுரை மின் மறைவுக்கு அனு தாபந் தெரிவிக்குமுகமாக இம் மாதம் 8-ந் திகதி சனிக்கிழமைமாலேசென்னே கடற்கரையில் காந்தி சிலேக் கருகில் நடைபெறவிருக் கும் பொதுக்கூட்டத்தில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும் கலந்து கொள்வார்.

திருப்பதி செல்லும் வழி யில் சனிக்கிழமை சென்னே வரும் பிரதமர் இந்திரா, அண்ணுவின் இல்லத்துக் குச் சென்று திருமதி ராணி அண்ணுதுரையிடம் நேரில் தமது அனுதாபங் களேத் தெரிவித்துக்கொள் வார். சென்னேநகர ஷெரிப் அனுதாபக் கூட்டத்தை ஒழுங்குசெய்துள்ளார்.

## 39பேர் சென்ற லொறி புரண்டது

அண்ணுவின் இறுதி யாத் திரையிலும் ஈமச் சடங்கு களிலும் கலந்து கொண்டு விட்டு ஒரு லொறியில் சென்ற 68 பிரயாணிகள் விபத்துக்குள்ளானுர்கள். கிருஷ்ணகிரிக்குச் சமீபத்தில் ஒருமதகுடன் இந்த லொறி மோதிக் குடைசாய்ந்தது. இதில் இருவர் ஸ்தலத்தி லேயே மாண்டனர். 37 பேர் காயமடைந்தனர். இவர்கள் உடனடியாக ஆஸ் பத்திரியில் அனுமதிக்கப்பட் டனர். இவர்களில் இருவர் ஆஸ்பத்திரியிலே கால மானுர்கள். வேறு சிலரின் நிலேயும் ஆபத்தாக இருக்கி றது.

அண்ணுவின் இறுதியாத்தி ரையில் கலந்துகொள்வதற் காக மதுரை-ஜனதா எக்ஸ் பிரஸ் ரயிலின் கூரைமீதி விருந்துவந்து கொள்ளிடம் பாலத்தில் மோதி விபத்துக் குள்ளாகி மாண்டவர்களின் எண்ணிக்கை இப்போது 32 ஆக உயர்ந்துள்ளது.

ஸ்தலத்தில் மாண்டவர்கள் 24 பேர். ஆஸ்பத்திரியில் 8 பேர் கால்மானுர்கள். ஒரு வர் சென்னேபெரியாஸ்பத் திரிக்குக் கொண்டுவரப்பட் டிருக்கிருர்.

விபத்தில் சிக்கி கடலூர், சிதம்பரம் ஆஸ்பத்திரிக ளில் சிகிச்சை பெற்றுவருப வர்களே தமிழ்நாடு சுகா தார அமைச்சர் சாதிக் பாட்சா சென்று பார்த் தார்.

இந்த விபத்தில் காலமா னவர்களின் குடும்பங்க ளுக்கு தலா 300 ரூபாவும் காயமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 150 ரூபாவும் வழங்கத் தமிழ் நாடு அரசாங்கம் தீர்மானித் திருக்கிறது.

கொள்ளிடம் பாலம்விபத் தில் மாண்டவர்களின் குடும் பங்களுக்கு தமிழ் நாடு கவர் னர் சர்தார் உஜ்ஜல் சிங் தமது ஆழ்ந்த அனுதாபத் தைத் தெரிவித்திருக்கிருர்.

## சாகும் வரை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி
கையாக இருந்தவர் திரு. பூட்டோ. அயூப் ஆட்சியை எதிர்த்து கடும் எதிர்ப்பு நடிவடிக்கைகளில் இவர் ஈடு பட்டிருந்தார். அடுத்த ஜனு திபதி தேர்தலில் அயூப்பு டன் பூட்டோ போட்டியிட விருக்கிருர்.

அயூப் ஆட்சியில் நடக் கும் கொடுமைகளே எதிர் உண்ணுவிரதம் இருக்கப் கபாவதாக பூட்டோ அறி வித்துள்ளார்.

## தி. மு. க...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
டுக்கப்பட வேண்டுமென பெரும் பான்மையான சட்டசபை உறுப்பினர்கள் அபிப்பிராயப் படுகிருர்க ளாம்.

எப்படியும் முதலமைச்ச ராக திரு. நெடுஞ்செழி யனே தெரிவு செய்யப்படு வார்என்று வெளியில் பேசிக் கொள்ளப் படு கி ன் ற து. அண்ணு மறைந்தபிறகு தம் பிகளுக்கிடையே பதவிப் போட்டி வந்துவிட்டது என்று எதிர்க்கட்சியினர் பேசிக்கொள்ள இடம்வைக் கக்கூடாதென்று கட்சியின் முக்கிய பிரமுகர்கள் எண் ணுகிருர்களாம்.

## மலேஉச்சியைப் பிடிக்க 9 குருடர் முயற்சி

ஒன்பது குருடர்கள் ஒரு ஒப்பற்ற சாதனேயில் இறங்க விருக்கிருர்கள். ஆபிரிக்கா வில் அதிஉயர்ந்த மலேச்சிக ரத்தை அடைவதே இவர்க ளது திட்டமாகும்.

இந்த ஒன்பது குருடர்க ளும் ஆபிரிக்காவை சேர்ந்த வர்கள். எதிர்வரும் 16-ந் திகதி இவர்கள் கென்யாவி லுள்ள கிரிமஞ்சாரோ மலே யில் ஏற ஆரம்பிப்பார்கள். ஆறுதினங்களில் மலேச் சிக ரத்தை அடைய இவர்கள் திட்டமிட்டிருக்கிருர்கள். இந்த மலேச்சிகரம் 19,000 அடி உயரமுடையது என் பது குறிப்பிடத்தக்கது.

லண்டனிலுள்ள குருடர்க ளுக்கான ராயல் சாம்ராஜ்ய சங்கத்தின் ஆதரவின்கீழ் இந்த முயற்சி மேற்கொள் ளப்படுகிறது. பிரிட்டிஷ் பாடசாலேகள் இதற்கான நிதியுதவியை வழங்கியுள் ளன.

## 17 வயது இளம் யுவதியை கடத்தினுர்களாம்

புலோலி வியான்
நெல்லண்டை பத்திர காளி அம்மன் கோயில் அரு காமையில் வசிக்கும் ஒரு வருடைய 17 வயதுடைய மகளே அதே இடத்தைச் சேர்ந்த ஒருவரும் அவ ருடைய சகோதரர்களும், நண்பர்களும் சேர்ந்து பலாத்காரமாய் வீட்டினுள் புகுந்து நள்ளிரவு 12 மணி யளவில் காரில் கடத்திச் சென்றுவிட்டார்களாம்.

இளம்பெண்ணின் அல றல் சத்தம்கேட்ட பெற் ருேரும், சகோதரர்களும் காப்பாற்றமுயன்றபொழுது கடத்திச் செல்ல வந்த நபர் களால் கடுமையாக தாக் கப்பட்டார்களாம். இளம் பெண்ணின் சகோதரர் ஒருவருக்கு மிளகாய்த்தூள் முகத்தில் வீசப்பட்டதாம்.

பருத்தித்துறை பொலி சாருக்கு கிடைத்த தக வலின்படி வல்வெட்டித் துறையில்வைத்து இச் சம்ப வத்தில் ஈடுபட்டதாக கரு தப்படும் மாணிக்கன் சகோ தரன் பொன்னன், இரா சன், உதவிக்குவந்தவர் என்று கருதப்படும் முத் தன் ஆகிய மூவரையும் பொலிசார் றிமாண்டில் வைத்துள்ளனர்.

## 1000 செலவில் ஆலய மண்டபம்

அளவெட்டி வியான்
குப்பிளான் சமாதி அம் மன்கோவிலில் பல ஆயிரம் ரூபா செலவில் ஒரு மண் டபம் அமைக்கப்பட்டுள் ளது.

இம் மண்டபம் நேற்று மேற்படி கோவிலில் நடை பெற்ற விசேஷ அபிஷேக ஆராதனேகளே அடுத்து சம் பிரதாயமுறைப்படி திறந்து வைக்கப்பட்டது.

இதையடுத்து புதியமண்ட பத்தில் கூட்டுவழிபாடும் இடம்பெற்றது.

## சுவீப் ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 40 | U | 0908 | 19 | B | 0535 |
| 04 | X | 0405 | 43 | Z | 0298 |
| 25 | V | 0981 | 35 | F | 0637 |
| 10 | K | 0024 | 24 | R | 0607 |
| 13 | P | 0310 | 27 | F | 0647 |
| 37 | W | 0800 | 12 | Y | 0863 |
| 40 | G | 0245 | 20 | E | 0976 |
| 29 | C | 0983 | 50 | Z | 0094 |
| 36 | F | 0681 | 30 | Z | 0561 |
| 30 | Q | 0104 | 29 | T | 0996 |
| 49 | W | 0140 | 05 | X | 0227 |
| 27 | M | 0056 | 32 | Q | 0154 |
| 28 | O | 0087 | 23 | D | 0449 |
| 18 | D | 0985 | 46 | A | 0236 |
| 33 | O | 0057 | 04 | D | 0949 |
| 29 | E | 0479 | 31 | R | 0445 |
| 29 | G | 0244 | 11 | M | 0695 |
| 06 | J | 0272 | 23 | Q | 0675 |
| 50 | G | 0577 | 11 | Q | 0171 |
| 15 | R | 0547 | 21 | Y | 0432 |
| 17 | E | 0314 | 47 | G | 0993 |
| 34 | E | 0281 | 44 | Z | 0399 |
| 16 | C | 0361 | 30 | M | 0167 |
| 09 | K | 0070 | 39 | R | 0065 |
| 21 | K | 0408 | 44 | R | 0515 |
| 17 | G | 0118 | 21 | O | 0894 |
| 30 | U | 0178 | 14 | A | 0107 |
| 04 | W | 0988 | 21 | L | 0362 |
| 40 | J | 0077 | 12 | P | 0575 |
| 01 | V | 0757 | 19 | J | 0761 |
| 44 | S | 0547 | 46 | F | 0111 |
| 36 | O | 0268 | 21 | X | 0436 |
| 21 | T | 0130 | 25 | Q | 0653 |
| 36 | S | 0491 | 40 | J | 0944 |
| 46 | S | 0216 | 34 | S | 0868 |
| 50 | H | 0584 | 30 | G | 0001 |
| 02 | P | 0271 | 32 | W | 0786 |
| 04 | Y | 0806 | 11 | R | 0736 |
| 19 | X | 0532 | 25 | Z | 0235 |
| 30 | N | 0832 | 50 | L | 0352 |
| 19 | X | 0868 | 38 | N | 0287 |
| 31 | 0 | 0112 | 08 | M | 0619 |
| 05 | X | 0806 | 27 | O | 0929 |
| 38 | Y | 0092 | 25 | Y | 0872 |
| 36 | J | 0845 | 34 | Y | 0525 |

(இவை உறுதிப்படுத்தப் படவேண்டியவை)

## புத்தூர் கி. சபைக்கு விரைவில் மின்சாரம்
### ரூ. 1,10,085 நிதி ஒதுக்கீடு

புத்தூர், வியா.
புத்தூர் கிராமசபையின் மின்சார விநியோகத்திற் கென மத்திய அரசாங்கம் இந்த நிதியாண்டில் ஒரு லட்சத்து 10 ஆயிரத்து 85 ரூபாவை ஒதுக்கியுள்ளது.

புத்தூர் கிராமசபையின் மின்சார விநியோகத்திற்கு நிதி ஒதுக்கும்படி கிராம சபையினர் பலமுறை அர சாங்கத்தைக் கோரியிருந்த னர். கிராமசபைத்தலேவர் திரு. சி. நடராசா இதுசம் பந்தமாக பலதடவை சம் பந்தப்பட்ட அமைச்சரைச் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியிருந்தார்.

இந்த நிதிஆண்டு முடிவுக் குள் புத்தூர் கிராமசபை மின்சார விநியோகத்திற் கான வேலேகள் ஆரம்பமா கவிருக்கிறது.

## ஜெமினி—சாவித்திரி இன்று இங்கு வருகிருர்கள்

சித்தங்கேணி வெள்ளி
தென்னிந்தியதிரைஜோடி யான ஜெமினி கணேசனும் சாவித்திரியும் இன்று சித் தங்கேணிக்கு வருகிருர்கள்.

இவர்கள் இருவரும் சாவ கச்சேரி சங்கத்தானேயைச் சேர்ந்த (ஜெமினி) மருமகனின் திருமணத்தில் கலந்துகொள்வதற்காக வே இங்கு வருகிருர்கள்..

## நெடுந்தீவுக்கு ரூ.62,000 பிரேமதாசா ஒதுக்கினுர்

நெடுந்தீவு வியான்
''நான் செயலில்தான் நம் பிக்கையுள்ளவன். செய்யக் கூடிய விஷயங்களுக்குத் தான் வாக்குறுதி கூறுவேன். அதையும் உடன் செய்து விட நடவடிக்கை எடுப் பேன். இன்று உங்கள் ஆட்சிமன்ற உறுப்பினரும் கிராமசபைத் தலேவரும் கேட்டுக்கொண்டவற்றில் முதலாவதாக 62 ஆயிரம் ரூபா உங்கள் நன்னீர் திட் டத்திற்கு இன்றே ஒதுக்கி யுள்ளேன்'' இவ்வாறு நெடுந் தீவுக்கு விஜயம் செய்திரு ந்த உள்ளூராட்சி அமைச் சர் திரு. பிரேமதாசா கூறி னுர்.

நெடுந்தீவு மாவித்தியா லய மண்டபத்தில் பெரும் திரளான மக்கள் மத்தியில் பேசிய மந்திரி தொடர்ந்து பேசியபோது, நான்முன் ஒரு தடவை சாதாரண மனித னுகத் திரு. சேர். ஜோன். கொத்தலாவலேயோடுஇங்கு வந்திருந்தேன். ஆனுல்அன்று நான் திரும்பவும் ஒரு மந் திரியாக வருவேன் என்று எண்ணியிருக்கவே இல்லே. முன்பு இங்கு வந்துசென்ற மந்திரிகளானசேர் ஜோனும் திருச்செல்வமும் பதவியிழ ந்துவிட்டார்கள். ஆனுல் நான் முதலில் சாதாரண மனிதனுக வந்து திரும்பி தற்பொழுது மந்திரியாக வந்திருக்கிறேன். எங்கள் இலங்கையின் வடபிரதேசத் திலுள்ள நெடுந்தீவை நாம் மிகவும் கவனமாகக் கவனிக்கவேண்டும். இல்லேயானுல் இன்று கச்ச தீவுக்கு ஏற்பட்டுள்ள பிர ச்னே போல் நெடுந்தீவுக்கும் ஏற்பட்டுவிடும் என்றும் கூறினுர். கூட்டத்திற்கு நெடுந்தீவு கிராமசபைத் தலேவர் திரு. அ. த. அம் பலம் தலேமைதாங்கினுர்.

தலேவர் தமது தலே மையுரையில் நெடுந்தீவில் கள்ளக்கடத்தலோ அல்லது சட்டவிரோத குடியேற்றக் காரரோ இல்லாத போது இங்கு இராணுவத்தை அர சாங்கம் அனுப்ப எத்தனிப் பதை எங்கள் தீவுமக்கள் எதிர்ப்பார்கள். இதனே மத்திரியார் தலே யிட்டு நிறுத்திவைக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன் என்ருர்.

தீவுப்பகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினமும் கூட்டத்தில் பேசினுர்.

கூட்டத்தில் கிராமசபைத் தலேவர் திரு. அ. த. அம்ப லம் ஒரு மகஜரை மந்திரியி டம் வழங்கினுர்.

## 28 பேர்எரிந்தனர்

டோக்கியோ 6
மேற்கு ஜப்பானில் 28 பேர் உயிருடன் எரிந்தார் களாம். எதிர்பாராத விதமாக பலத்த உஷ்ணக் காற்று வீசியபோது இந்தத் தீவிபத்து ஏற்பட்டது. 24 பேர் எரிகாயங்களுக்குள்ளா ஞர்கள்.

## பிரதமருடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
திகதி நடாத்தும் பேச்சு வார்த்தையின் எதிரொலி எப்படி அமையும் என்ப தைத் தொடர்ந்தே 22 ம் திகதி தமிழரசுக் கட்சி எம். பிக்களின் முடிவுஇருக்கும்.

## அனுதைப் பிணம்

புலோலி வியாழன்
இனம்தெரியதாத ஒரு வர் நேற்றிரவு மந்திகை ஆஸ்பத்திரில் அனுமதிக்கப் பட்டு இறந்தார்.

இவரை ஆஸ்பத்திரியில் வடமராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஒரு கிராமசேவை யாளர் சேர்த்தாரென்றும் இவருக்கு சொந்தக்காரர் எவரும் இல்லேயென்றும் விசாரணேயில் தெரியவந் துள்ளது. இவர் யார் என் பது தெரியாத ஆஸ்பத்திரி டாக்டர் திரு. எஸ். கதிர் காமத்தம்பி உறவினர்கள் எவரும் வராததாலும் அர சாங்க செலவில் சடலம் அடக்கம்செய்யப்பட உத் தரவிட்டார்.

## ஆங்கிலக்கல்வி கருத்தரங்கு

பருத்துத்துறை, வியா.
வடமராட்சி ஆசிரியர் சங்கம் ஆங்கிலக்கல்வி அபி விருத்தி நோக்கமாக நடாத் தும் கருத்தரங்கு இம் மாதம் 10 ம் திகதி பிற் பகல் 4 மணிக்கு பருத்தித் துறை ஹாட்லிக்கல்லூரி மண்டபத்தில் நடைபெற விருக்கிறது. இதில் திரு. ஆர். ஈ. டி. ஏ. சேதுகாவ லர், திரு. ஈ. பி. சபா பதிப்பிள்ளே ஆகியோர் ஆங் கிலக்கல்விப் போதனுமுறை பற்றி கருத்துக்கள் வழங்க விருக்கின்றனர்.

இப்பத்திரிகை. ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத் தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில்1969-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 7-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org